# பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

| | | |
|---|---|---|
| மாலை 1 | ஞாயிறு 19-2-39 வெகுதான்யஹு மாசிமீ 8உ | முத்து 21 |


## பொருள் அடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. பேரறிஞர் பிதற்றல் | ... | 562 |
| 2. குறிப்பு | ... | 564 |
| 3. போகிற போக்கில் | ... | 565 |
| 4. வார நடப்பு | ... | 568 |
| 5. பட்ஜட் என்பது என்ன ? | ... | 569 |
| 6. திண்ணையில் (ராவ் சாகேப் கே. சுப்ரமண்யம்) | ... | 571 |
| 7. கிராமப் புத்தகசாலைகள் (ராவ் சாகேப் எஸ். ஆர். ரங்கநாதன்) | ... | 573 |
| 8. ஸினிமா பார்த்தபின்! (ஸ்ரீ. ய. மகாலிங்க சாஸ்திரி, எம். ஏ., பி. எல்.) | ... | 576 |
| 9. நிச்சிதார்த்தம் ("ரஸிகன்") | ... | 577 |
| 10. இல்லொளி ("துகப்ரியை") | ... | 581 |
| 11. பகிரங்கக் கடிதமல்ல ("சிட்டி") | ... | 585 |
| 12. பத்து ரூபாய் (ஸ்ரீ. ஆர். பங்காருஸ்வாமி) | ... | 587 |
| 13. சிறுவர் பகுதி | ... | 588 |
| 14. சுகாதாரம் | ... | 590 |
| 15. வலை வீச்சு | ... | 591 |


"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



# பேரறிஞர் பிதற்றல்

மேல் நாட்டுப் பேரறிவாளர்கள் பலருக்கு இந்தியா என்றால் அலட்சியம். ஒரு சிலர்தான் சிரத்தையுடன் நமது சரித்திரத்தையும் நாகரிகத்தையும் பற்றித் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். பெரும்பாலோருக்கு இந்தியா ஒரு காட்டுமிராண்டி தேசமென்றே ஒரு அபிப்பிராயம். அவர்கள் எழுதும் விஞ்ஞான ஆராய்ச்சிகளிலும் அவர்கள் இந்தியாவைக் கணக்கில் எடுத்துக்கொள்ளுவதே இல்லை. தெரிந்தால் தானே? அவர்களுக்கு உலகம் என்றால் ஐரோப்பாதான்.

வெல்ஸ் என்பவர் இங்கிலாந்தின் சரித்திராசிரியர்களில் ஒருவர். உலகத்தின் எதிர்காலத்தைப்பற்றி ஜோஸ்யம் கூறுவதில் நிபுணர் என்று பெயர் பெற்றவர். உலக சரித்திரச் சுருக்கம் (Outline of History) என்று ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். அதில் அவர் இந்தியா ஒன்று ஆதிகாலத்தில் இருந்தது என்பதையே காட்டிக்கொள்ளவில்லை. அசோக சக்கரவர்த்தி ஒருவர்தான் இங்கிருந்து அவர் கண்ணில் பட்டார். உலக சரித்திரத்தில் இந்தியா கொண்டிருக்கும் பங்கு அவர் கண்ணில் படவில்லை. சிரமமெடுத்துக் கொண்டு பார்த்தால்தானே தெரியும்?

இந்த மகான் சமீபத்தில் ஆஸ்திரேலியா போய்விட்டு ஊருக்குத் திரும்பிப்போகும் வழியில் ஜோட்பூரில் சில நாட்கள் தங்கினார். பத்திரிகை நிருபர்கள் சும்மா இருக்கிறார்களா? அவர்களுக்கு இதுதானே தொழில்? அவரிடம் போய் "நீங்கள் இந்தியாவைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? தற்கால அரசியல் நெருக்கடி எப்படி முடியும் என்று உங்களுக்குத் தோன்றுகிறது? உங்கள் ஜோஸியத் திறமையைக் கொஞ்சம் காட்டுங்களேன். காந்திஜி உங்களுக்கு எப்படிப்படுகிறார்?" என்றெல்லாம் அவரைப் போய்க்கேட்டால் அவர் என்ன செய்வார்? அவருக்கு இந்தியாவைப்பற்றி ஒன்றும் தெரியாது, காந்திஜியைப்பற்றியும் தெரிந்து கொள்ள முயற்சி செய்யவில்லை. அவர் தன்னைப் பற்றி அவ்வளவு பெரிதாக நினைத்துக் கொண்டிருக்கும்பொழுது காந்திஜியைப் பற்றி அறிய இடமேது? அவர் சர்வதேசீய இயக்கத்தைப்பற்றி வானளாவப் பேசுகிறவர்; காந்திஜி கேவலம் ஒரு மட்டமான நாட்டின் சுதந்திரத்திற்குப் போராடுகிறவர்தானே என்பது அவர் எண்ணம்.

ஆனால் பத்திரிகை நிருபர்கள் வந்து சூழ்ந்துகொண்டு மன்றாடினபொழுது காந்திஜியைப்பற்றி அவரால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. "உங்கள் காந்தி நேரு செய்வதெல்லாம் சுத்தப் பிசகு. கண் மூடித்தனமாக மேல்நாட்டு அரசியல் முறைகளைப் பின்பற்ற முயலுகிறார்கள்" என்று ரொம்பத் தெரிந்தவர்போல ஒரு போடு போட்டார்.

வெல்ஸின் சரித்திர ஞானம் அபாரமானது என்ற கதையை ஹிலயர்பெல்லாக் என்ற மற்றொரு பெயர்பெற்ற ஆங்கில ஆசிரியர் பொடியாக்கிவிட்டார். ஆனாலும் வெல்ஸின் வீச்சுகள் மக்களின் மனதைக் கவருகின்றன. ஏனெனில் எங்கேயோ, எப்பொழுதோ, நிச்சயம் உலகத்திற்கு விடிமோட்சமுண்டு என்று அவர் கூறுகிறார். அதற்காக வருங்காலத்தைப்பற்றி ஜகஜ்ஜாலக் கதைகள் எல்லாம் எழுதுகிறார்; விஞ்ஞானக் குருணியைக் கொட்டிக் கொட்டி அளக்கிறார்; ஆனால் அது பதக்காகாது என்பது அவருக்குத் தெரியவில்லை, அது தொலையட்டும்.

காந்திஜி மேல் நாட்டைப் பின்பற்றுகிறார் என்று இந்த மகான் எப்படிச் சொல்லுகிறார் என்பதுதான் நமக்கு விளங்கவே இல்லை. காந்திஜியின் அஹிம்ஸா தத்துவம் மேல்நாட்டுச்சரக்கு என்று வெல்ஸ்

அவ்வளவு கண் மூடித்தனமாக உளருகிறார் என்று நாம் நம்ப முடியவில்லை. தேசிய வாதத்தில் காந்திஜி மேல் நாட்டுக் கொள்கையைப் பின்பற்றுகிறார் என்று பொருள் படும்படியாகத்தான் வெல்ஸ் சொல்லியிருக்க வேண்டும். அப்படிச் சொல்லியிருந்தாலும் வெல்ஸின் அபிப்பிராயம் சுத்தப் பிசகல்லவா?

சத்தியாக்கிரகத்தை அடிப்படையாகக் கொண்ட காந்திஜியின் தேசீய வாதம் மேல்நாட்டுக் கொள்கை அல்ல என்பதை அவர் தெரிந்துகொள்ளப் போகிறாரா என்ன? இல்லவே இல்லை. மேல் நாட்டு தேசிய வாதம் பலாத்காரத்தை அடிப்படையாகக் கொண்டதாயிற்றே? அதற்கும் நமது லட்சியத்திற்கும் இருக்கும் வித்தியாசம் வெல்ஸின் விரிந்த மூளையில் ஏன் உதயமாகவில்லை? நமது தேசிய வாதம் நமது உயர்வுக்குமட்டும் பாடுபடுவதல்ல. அது நம்மையும் மேம் படுத்தும்; உலகத்தையும் சேர்த்து மேம்படுத்தும். நமது அஹிம்ஸா தர்மம் மகாகவி ஷேக்ஸ்பியர் கருணையைப்பற்றிச் சொன்னது போல சத்தியாக்கிரஹியையும் உயர்த்துகிறது; அவனுடைய எதிரியையும் உயர்த்துகிறது. இது குறுகிய நோக்கம் கொண்ட மேல் நாட்டுப் போட்டி அல்ல. இது ஆத்ம நிதர்சனம். இதன் மூலம் இந்தியா ஸ்வராஜ்யம் அடைந்தால் அதனால் உலகமே ஸ்வராஜ்யம் பெறும் என்று நாம் நம்புகிறோம். காந்திஜியின் லட்சியமே அதுதான். காந்திஜியின் திட்டம் உலகத்திற்கு உதவியாக இருக்கக்கூடிய ஒரு திட்டம். அது தேசியவாதமே அல்ல; லோகிய வாதமென்றால் அதைத்தான் சொல்லவேண்டும். அதை அவர் இந்தியாவில் நடத்தி நிரூபித்துக்காட்டுகிறார், அவ்வளவுதான். சமீபத்தில் அதை ஜெக் பிரஜைகளுக்கும் யூதர்களுக்கும் கூட எடுத்துச் சொன்னார்.

சொல்லப் போனால் வெல்ஸ் கனவு காணும் உலக சாம்ராஜ்யமும் சர்வதேச சபையும் ஒரு வேளை நிறைவேறக் கூடுமானால் சத்தியாக்கிரக முறை மூலம்தான் நிறைவேற வேண்டும். பலாத்காரத்தையே நம்பியிருக்கும் கொள்கைகள் மூலமா அது வரப்போகிறது? இந்தப் பிரளயத்திற்குள் இல்லை.

வெல்ஸ் தத்துவத்தை நன்றாக ஆராய்ந்து பார்க்காமல், ஒரு விஞ்ஞானி, தீர்க்கதரிசி என்று ஆயுள்பூராவும் கொட்டை பரப்பிய பிறகு, இப்படிப் பிதற்றிவிட்டதைக்கண்டு வருந்துகிறோம். புத்த பகவானுடைய முயற்சிக்குப் பிறகு உலக சரித்திரத்திலேயே அடுத்தபடியாக அமைதியை ஏற்படுத்தித் தலை தூக்கியிருக்கும் மகத்தான இயக்கத்தை வெல்ஸ் இப்படி அசட்டுத் தனமாக ஒரு வார்த்தையில் உதறி எறிந்துவிட்டது அவருடைய குருட்டு மமதையைத்தான் காண்பிக்கிறது.

---

(564-ம் பக்கத் தொடர்ச்சி)

மாதிரி நிலைமையை உண்டாக்கிவிட்டீர்களே உங்கள் இஷ்டம்போல் விடமுடியாது" என்று போஸைப்பற்றி பீகார் அபேதவாதிகள் ஏகமனதாக அபிப்பிராயப் படுகிறார்களாம்.

நம்பினவர்கள் போஸை இப்படியா கைவிடுவது? பாவம்! டாக்டர் ராஜன் சொல்லுவதுபோல் அவர் நிலைமை மிகவும் பரிதாபகரமாகத்தான் இருக்கிறது. அபேதவாதிகள் செல்வாக்குநஷ்டத்திற்குப் பயந்து இப்படி தலைவரைக் காலைவாரி விடுவது தர்மமா?

ஆனால் போஸ் பக்கம் இன்னும் ஒருவர் இருக்கிறார். ஸ்ரீ எம். என். ராய் மீசையை முறுக்குகிறார். போஸுக்குக் கை கொடுத்து உதவ தன் அக்ஞாதவாசத்திலிருந்து வெளியே வந்துவிட்டார்.

## கூட்டுறவு இயக்கம் வெற்றியா?

சென்னை நில அடமான பாங்கிக் கூட்டத்தில் பேசியபொழுது கூட்டுறவு நமது மாகாணத்தில் வெற்றிதான் பெற்றிருக்கிறது என்று ராஜாஜி கூறினர். அரசாங்கத் தலைமையில் இருப்பதால் அவருக்கு அந்த அபிப்பிராயத்தில் புள்ளி விவரங்கள் கூட ஒரு வேளை சாதமாக இருக்கலாம். ஆனால் கூட்டுறவு இயக்கம் நமது மாகாணத்தில் வெற்றிபெற்றிருக்கிறது என்று கிராமங்களை அறிந்த யாரும் சொல்லமாட்டார்கள் என்பது நிச்சயம். சில நகரங்களில் தான் சில ஸ்வயநலமற்ற பிரமுகர்களின் முயற்சியால் சில பிரதம ஸ்தாபனங்கள் சரியாக நடக்கின்றன. பெருவாரியான கிராமங்களில் கூட்டுறவு இயக்கம் பரிபூர்ணமான தோல்வி.

குறிப்பு

# போர் முஸ்தீப்புகள்

காந்திஜி நாட்டின் நாடியைப் பிடித்துப் பார்த்து தகுந்த சமயத்தில் செயல் செய்யும் சக்தி வாய்ந்தவர் என்று நேரு சொன்னர். அந்த சாமர்த்தியத்தில் அவருக்கு நிகராக யாரையும் சொல்ல முடியாது என்பதில் சந்தேகமில்லை. வாயை மூடிக்கொண்டு சிவ கிராமத்தில் உட்கார்ந்திருந்தவர் திடீரென்று போர் அரங்கத்தில் தோன்றிவிட்டார். யார் அவரைக் கூப்பிட்டார்கள்? அவருக்குத் தருணம் தெரியும்.

நிலைமையும் அவர் போட்ட திட்டப் பிரகாரமே முற்றி வருகிறதுதான் விசேஷம். 14-ம் தேதி டில்லியில் கூடிய சமஸ்தானப் பிரஜைகள் மகாநாட்டில் நிலைமைக்கேற்ற சில முக்கியமான தீர்மானங்கள் நிறைவேறின.

சமஸ்தானங்களின் போரில் காங்கிரஸ் தலையிடத் தீர்மானித்துவிட்டதால் காங்கிரஸுடன் ஒத்துழைக்க ஒரு நிரந்தரக் கமிட்டி யொன்று நியமிக்கவேண்டு மென்று தீர்மானம் செய்யப்பட்டது. காங்கிரஸே தலையிட்டுவிட்ட பொழுது சமஸ்தானப் பிரஜைகள் மகாநாடே தேவையா என்று பிரச்னையும் கூடக் கிளம்பிவிட்டது.

பண்டித ஜவஹர் டில்லியில் அதே தேதி பேசின பொழுது ஒரு அகில இந்திய நெருக்கடி நிச்சயமாக நெருங்கி விட்டது என்று எச்சரித்தார். காங்கிரஸ் மந்திரிகள் கூட ராஜிநாமாச் செய்யவேண்டிய நிலைமை ஏற்படலா மென்றும் சொன்னர்.

ஜெய்பூர் சமஸ்தான அதிகாரிகள் தீவிரமாக நடவடிக்கை எடுக்கவும் தைரியமின்றி, சும்மா இருக்கவும் மனமின்றி அசட்டு சாமர்த்தியம் செய்து கொண்டிருக்கிறார்கள்; ஜம்னலால் பஜாஜை பொம்மைபோல வைத்துக்கொண்டு விளையாடுகிறார்கள். அந்த அம்சத்தில் ராஜ்கோட் சமஸ்தானம் கூடக் கொஞ்சம் தைரியமாக கஸ்தூரிபாயையும் மணிபென் படேலையும் சிறை செய்துவிட்டது.

எப்பொழுதும் போல இனிமேல் நாட்டினர் காந்திஜி என்ன செய்யப்போகிறார் என்று தான் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருப்பார்கள். அவருடைய சொற்களில் ஒத்துழையாமை காலத்திலிருந்த வேகம் திரும்பி வந்துவிட்டது. அதில் போர் சூசனை இருக்கிறது. இந்த சமயத்தில் ஜெய்பூர் பிரதம மந்திரி வக்கணையாக அவரிடம் அகப்பட்டுக் கொண்டு விட்டார்.

15-ம் தேதி சென்னையில் பேசியபொழுது ஸ்ரீ சீனிவாச அய்யங்கார் காங்கிரஸ் சமஸ்தானங்களில் தலையிடக்கூடாது என்று இருந்தது பிசகு என்று அறிந்துவிட்டதைக் கண்டு மகிழ்ச்சி அடைவதாகக் கூறுகிறார். காங்கிரஸ் இது வரையில் தலையிடாதது பிசகல்லவே அல்ல; இனிமேல் தலையிடாமல் இருந்தால் தான் பிசகாகும். பிறர் சொல்லுவதற்கு முன்பே, நிலைமையை நிர்த்தாரணம் செய்து காங்கிரஸ் சரியான சமயத்தில் சமஸ்தான விஷயங்களில் தலையிட்டிருக்கிறது என்பதில் என்ன சந்தேகம்?

## அபேதவாதிகள் விழிப்பு

சமீபகாலத்து காங்கிரஸ் தேர்தல் சம்பவங்களிலிருந்து ஏற்பட்ட நிலைமையைப்பற்றி 'பம்பாய் ஸெண்டினல்' பத்திரிகை சில ருசிகர விவரங்கள் கூறுகிறது. அவை எவ்வளவு தூரம் நிஜம் என்பது தெரியவில்லை. ஆனல் ஸ்ரீ சுபாஷ் பாபுவின் வர்தாப் பிரயாணத்திலிருந்து அவை அநேகமாகச் சரியாக இருக்கலாம் என்று தெரிகிறது.

ஜவஹரைத் தவிர, ஆசாரிய நரேந்திர தேவ், ஜெயபிரகாச நாராயணர், சம்பூர்ணனந்தர், ஸ்ரீமதி கமலாதேவி, ஸ்ரீ மசானி முதலிய அபேதவாதத் தலைவர்கள் ஸ்ரீ போஸிடம், தாங்கள் காந்திஜியை எதிர்த்து போஸை ஆதரிக்கத் தயாரில்லை என்றும், காங்கிரஸை அவ்வளவு தீவிரமாக்க இன்னும் சமயம் வரவில்லையென்றும் சொல்லி விட்டார்களாம். காங்கிரஸில் பிளவு ஏற்படுத்த அபேதவாதக் கட்சி தயாரில்லை என்று சொல்லிவிட்டார்களாம். ஆகையால்தான் கல்கத்தா மகாநாட்டில் ஒரு தனி இடது சாரார் கோஷ்டி ஏற்பாடாகவில்லையாம்! இதனல்தான் போஸ் வர்தா போக வேண்டி ஏற்பட்டுவிட்டதாம்!

"சேச்சே! வலது சாரார்கள் சமஷ்டி எதிர்ப்பில் அவ்வளவு தீவிரமில்லை என்பது சுத்த அபாண்டம். இதோ பாருங்கள் ராஜ்கோட்டையும் ஜெய்ப்பூரையும். வலது சாரார்கள் சமஷ்டி மந்திரிகள் ஜாப்தாகூட தயாரித்து விட்டார்கள் என்று பிரசாரம் செய்து இந்த

(563-ம் பக்கம் பார்க்க)

# போகிற போக்கில்



சென்ற வாரம் போகிற போக்கில் பறந்து போய் விட்டது. தலையங்கம் எழுதும் கவலையில் ஆழ்ந்து நின்றேன். அரசியல் நெருக்கடி வலுத்தது. மகாத்மா காந்தி அறிக்கையும் வெளி வந்தது. ராஜ்கோட், ஜெய்பூர் அரசியல் குழப்பமும் அதிகரித்தது. இச்சமயத்தில்கூட பட்டம் வகிக்கும் ஆசிரியர் தன் பேரிட்டுத் தலையங்கம் எழுத வேண்டாமா?

* * *

தலையங்கம் எழுதும் ஆசிரியருமில்லை. தலையங்கம் வாசிக்கும் வாசகர்களும் பத்திரிகை உலகில் இல்லை என்று ஒரு பழமொழி உண்டு.

பெயர் பெற்ற பெரிய பத்திரிகைகளில், நமது நாட்டிலும் சரி, மேல் நாட்டிலும் சரி, பட்டம் வகிக்கும் ஆசிரியர்கள் தலையங்கங்கள் எழுதுவதில்லை யென்பது உங்களுக்கு நன்றாய்த் தெரிந்த விஷயமே. அவர்களுக்கு இதர வேலைகளும், உல்லாசங்களும் உண்டு. "பாரத மணி" சிறிய பத்திரிகையாயிருந்தாலும், பெரிய பத்திரிகைகளின் பழக்க வழக்கங்களை அனுசரித்தாவது, சூரியனைக் கண்டு மலரும் தாமரைப் புஷ்பம் போல், சுகமாய் நீடித்து வாழவேண்டு மென்பது தான் என் கருத்து. என் பிரார்த்தனை.

நல்ல தீர்த்தத்தில் பாசி பிடிப்பது போல், பத்திரிகைத் தொழிலில் இது ஒரு வழக்கம்—ஆசிரியர்கள் தலை ஆட்டுகிறதே தவிர, தலையங்கம் எழுதுகிறதில்லை. எல்லா பிராமணர்களும் பிராம்மணார்த்தத்திற்குத் தகுதியாயிருந்தாலும் சிலரை மாத்திரம் தனியாக பிரித்துத் திட்டம் போட்டிருப்பதுபோல் பத்திரிகை உலகிலும் இந்த பிரிவினை ஏற்பட்டிருக்கிறது. இது மேல் நாட்டில் பிரபலமாய் வழங்குகிறது. தலையங்கம் எழுதுகிறவர்களே போர் வீரர்கள்போல் ஓர் தனி ஜாதியாய் விளங்கி வருகிறார்கள். வைகாசி மாதத்தில் கோடிக்கணக்காய் கோலா மீன்கள் அகப்படுவதுபோல் மேல்நாட்டில் பத்திரிகை வலையில் கோடிக்கணக்கான ஜனங்கள் அறிவு தேடப்போய் அதில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இக்கோடிக்கணக்கானவர்களுக்கு ஒரு பொதுத் தீனி கொடுத்து இழுக்க வேண்டுமென்றால் தலையங்கம் எழுதுவோர் என்ற ஒரு வர்க்கத்தை உண்டாக்க வேண்டியது அவசியந்தானே? இந்தப் பென்ஸில் போர் வீரர்கள் தங்கள் ஆயுதத்தைத் தினசரி தீட்டித் தயாரித்து வைத்துக் கொள்வார்கள். ஆசிரியர் கருப்புப் பொத்தானை அமுக்கினால் வலங்கை சண்டையை ஊட்டி வளர்த்து நிமிஷத்திற்கு நூறு வார்த்தை மணி போல் பொழிவார்கள். சிகப்புப் பொத்தானை அமுத்தினால் இடங்கைச் சண்டையை ஊட்டி வளர்த்து, இடைவிடாமல் ஊளையிடுவார்கள். இந்தப் பத்திரிகை உலகிலுள்ள ரகசியங்களை யெல்லாம் சொல்லி நான் என் "போகிற போக்கி"லை அனுவசியமாக வளர்க்கப்போகிறதில்லை. தட்டுக்கிட்டு வாசிப்பவர்களை நான் இதனால் இழக்கப் போகிறதில்லை.

* * *

சென்ற வாரம் "போகிற போக்கில்" எழுதாததற்குக் காரணம் இது மாத்திரமல்ல—தலையங்கத் தலைவிதிமட்டுமல்ல. குழந்தை காமாக்ஷி கொடுத்த சிற்றுண்டி மிகவும் ருசியாயிருந்ததால்—நாங்கள் இருவரும் போட்டி போட்டுக் கொண்டு ஜமாய்த்து விட்டோம்—நாங்கள் இருவரும் குட்டிக் கவிகள் அல்லவோ? ஈசன் செயலில் கவிகளுக்கு நல்ல பசி உண்டு. கவி யென்றால் நீங்கள் பயப்படவேண்டாம். நான் எழுதுவது அவருக்குப் புரி

யாது. அவர் எழுதுவது எனக்குப் புரியாது. ஆனால் பரஸ்பரம் ஒருவரை யொருவர் வளர்ந்து வரும் கவியாக ஒப்புக்கொண்டு வெகு காலம் அன்பு பாராட்டி வருகிறோம்.

சிற்றுண்டி ருசியில் அரசியல் ருசி மங்கப்பட்டுப் போய் விட்டது. காங்கிரஸ் மந்திரி சபை தப்பித்துக்கொண்டு விட்டது—இந்தக் கெடுவிற்கு.

* * *

"என்ன, சோமு, மந்திரி சபையின் சட்ட திட்டங்களின் இதர குற்றங்களை யெல்லாம் நன்கு ஆராய்ச்சி செய்து எடுத்துச் சொல்லேன் பார்ப்போம். புகுந்து பார்த்து சீர்திருத்தம் செய்தால்தான் நமது வேலை கொஞ்ச நாளாவது நிற்கும். பேசிக்கொண்டே தின்போம்—வெள்ளைக்காரர்கள் போல்."

"தின்று கொண்டே பேசுவோம்" என்று ரஸிகன் சோமு என் மொழியைத் திருத்தி, "அப்படி செய்வதும் தப்பு. தின்னும் போது மூளைக்கு ரத்தோட்டம் குறைவு. எல்லாம் வயிற்றுக்கு ஓடிவந்து விடுகிறது. ஆகையால் தான் நமது முன்னோர்கள், 'மௌனேன போக்தவ்யம்' என்று கட்டளை யிட்டிருக்கிறார்கள்."

"சிற்றுண்டி தின்னும்போதுகூடஸம்ஸ்கிருதமா சோமு? என் ருசியைக் கெடுக்கவா? தொன்னைக்கு நெய் ஆதாரமா, நெய்க்கு தொன்னை ஆதாரமா என்ற தர்க்கம் வேண்டாமே,—அது நமது ரத்தோட்டத்திலேயே இருக்கிறதே? காரியத்தைப் பார்ப்போம்" என்று நான் சொன்னேன். குழந்தை காமாக்ஷி தட்டில் இன்னும் ஒரு அடுக்கு கொண்டு வந்தாள்.

"பார்ப்போம், ருசிபார்ப்போம். உன்னை சாக்கிட்டுத்தான் எனக்கும் இன்றைய தினம் இப்படிப்பட்ட நல்ல தீனி கிடைத்திருக்கிறது."

"ஆனால் உனக்கு, சோமு, இந்த மாவு பண்டங்கள் பிடிக்காதே. தேன் பாகு, வெல்லப்பாகிலல்லவோ நீ மூழ்கி நிற்பாய்? அவல் கேஸரி, அல்வா, ஸொஜ்ஜி, வகைரா வல்லவோ உனக்குப் பிடித்தம்? நீ இனிய கவி அல்லவோ? ரத்தத்தில் திதிப்பை ஊட்டினால் தானே அது மூளையில் போய் வேலை செய்யும்?"

"சரிதான், ஆனாலும் ஙயசுகமில்லாத சிநேகிதர்கள் விருந்துக்கு வந்தால் அவர்களையும் ஆதரிக்கவேண்டாமோ? திருப்தி செய்ய வேண்டாமோ? இட்லி, சாம்பார்—"

"எனக்கு அது போதும். இட்லியை மட்டமாகச் சொல்லாதே. கங்கைகொண்ட சோழராஜன் போல், அது வட இந்தியாவை ஜெயித்து விட்டது. கல்கத்தா, டெல்லி போய்ப்பார். நாம் வார்த்தைகளை வீணாக வளர்ப்பானேன்? நாம் இருவரும் சிற்றுண்டியைப்பற்றிச் சண்டை போடுவதில் பலனென்ன? ஒருவருக்கொருவர் சளைக்கவில்லை. காரமா யிருந்தால் என்ன? தித்திப்பா யிருந்தால் என்ன? மந்திரி சபை சட்ட திட்டத்தை இன்னும் கொஞ்சம் கவனிப்போம். அதனால் தேசத்திற்காவது கொஞ்சம் நன்மை உண்டு."

"வயிற்றில் இவ்வளவு சிற்றுண்டி போட்டு, காபி—'டீ'யல்ல—சாப்பிட்ட பிறகா, ரமணி, அரசியல் கோபத்தையும் ஊக்கத்தையும் திரும்ப மூட்ட முடியும்? நீர்விட்டு அணைத்த அடுப்பை மறுபடியும் மூட்டுவதுபோல் தான். ரொம்பவும் ஊத வேண்டும். இப்பொழுது வயிற்றில் காற்று இல்லை!"

இந்த விஷயத்தில் பேசும் பேச்சு தளர்ந்துகொண்டிருந்தது. இந்த சமயத்தில் என் நண்பர் புஸ்தக விமர்சனங்களைப் பற்றியும் ஸம்ஸ்கிருத கவிகளின் அழகைப் பற்றியும் வழக்கம்போல் பேச ஆரம்பிப்பார் போலிருந்தது. ஆரம்பித்தால் அவரை நிறுத்து எனக்கு ரயில் தப்பிப் போய்விடும். முடியாது. தெய்வா தீனமாய் அது தடைபட்டது.

* * *

ஓர் எருமைக் கன்றுக்குட்டி வேலியை முறித்துக் கொண்டு சோமுவின் தோட்டத்திற்குள் புகுந்தது. சோமுவின் 'தோட்டத்தில்' மரங்கள் கிடையாது. புல்தான். அவர் பாகற்செடி கூட போடவில்லை. கீரைப்பாத்திகூட கிடையாது. எங்கும் புல். அதுவும் அருகம் பில்லா? இல்லை, கோரைப் புல்தான். எருமைக் கன்றுக் குட்டிக்குத்தான் தகுதி. சோமுவின் பக்கத்து வீட்டுக்காரர் ஓர் "ஜுவாலஜி ப்ரொபஸர்." காலேஜியில் நன்றாய் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கும் வண்ணம்

வீட்டில் எருமைக் கன்று ஒன்று வளர்த்தார். அவர் மனைவிக்கு, என்னைப் போல், வெண்ணெயில் ரொம்பவும் பிரியமாம்.

எனது நண்பர் சோமு உட்கார்ந்த இடத்தை விட்டுக்கூட எழுந்திருக்காமல் கூவிக் கட்டளை யிட்டார்.

"அடே பயல்களா, அந்தக் கன்றுக் குட்டியை உடனே ஓட்டுங்கள், உடனே விரட்டுங்கள்!"

அத்வைதி சோமுவுக்குத் தன் வீட்டுக் கோரைப் புல்லை அடுத்தாத்து எருமைக கன்றுக் குட்டி தின்னச் சகிக்கவில்லை.

"சோமு ஏன் அதை ஓட்டச் சொல்கிறாய்? நீயோ மாடு வைத்துக்கொள்ளவில்லை. தோட்டம் போடவில்லை. பாடுபட முடியாது. உன் 'தோட்டத்தில்' கிரைக்குச்சிகூட போடவில்லை. புல்கூட நன்றாய் முளைக்கவில்லை. அடுத்தாத்துக் கன்றுக்குட்டிதான் வந்து மேயட்டுமே. ஏன் இவ்வளவு கோபம்?"

"என்ன, ரமணி, நல்ல வேதாந்தம் பேசுகிறாய்! இங்கே மேய்ந்துவிட்டு அங்கே போய் பால் கறக்க வேண்டுமோ? அப்படியானால் ஏன் நீ வெள்ளைக்காரர்களைக் கோபித்துக் கொள்கிறாய்?"

"அதனால் தப்பென்ன, சோமு? தவிர கன்றுக்குட்டிதானே, பால் ஏது? நாம் இப்பொழுது ஒரு குத்து வெண்ணெய் தின்றோமே. அது எப்படி நமக்கு கிடைத்தது? அதற்குப் பதிலாக ஈசன் நம்மைச் சோதிக்க இந்த எருமைக் கன்றுக் குட்டியை அனுப்பியிருக்கிறார். நாம் உண்ணும் உணவுக்குப் பதிலாக என்ன வேலை செய்கிறோம்? புஸ்தகம் படித்தால் வெண்ணெய் மந்திரத்தால் வருமோ? சோமு, உன் குழந்தைகளைப் பார். நமது ஆரம்பக் கல்வி முறை என்ன முறை! எப்பொழுதும் ஸ்லேட்டும், ஒரு கட்டுப் புஸ்தகமும் நோட்டும் தான் கையில்! அந்தக் கன்றுக் குட்டிக்குப் புல் பிடுங்கிப் போட்டாலும் புண்ணியம் உண்டு. உயர்தரப் படிப்பும் உண்டு. கண்ணுக்கும் கைக்கும் வேலை உண்டு. கிணற்று ஜலத்தையாவது மொண்டு கொஞ்சம் வாடிக்கிடக்கும் வாழைக் கொத்திற்கு ஜலம் விட்டாலும் புண்ணியம் உண்டு. நாம் கையால் வேலை செய்யாமல் கட்டுரைகள் எழுதி வருவதில் என்ன லாபம்? யாருக்கு மோக்ஷம்? எவருக்கு விடுதலை? சோமு, இந்த வீட்டில் இரண்டு தென்னம்பிள்ளை வைத்துப் பயிராக்கக்கூடாதா? குடக்கூலி வீடாயிருந்தாலென்ன? யார் சாப்பிட்டாலென்ன? தானே தின்பதிலா உத்தமனுக்கு ருசி? பிறருக்கு அளிப்பதில்தானே? உற்பத்தி செய்வதில் தானே உயிருக்கு உண்மையான ருசி? இந்த வழியில் அல்லவோ குழந்தைகள் பழகி ஆரம்பக் கல்வி முறையில் தேர்ச்சியடைதல் வேண்டும்?" என்று நாங்கள் இருவரும் சேர்ந்து தீர்மானித்தோம்.

மந்திரி, சட்டசபைகளைச் சீர் திருத்தச் செய்யுமுன் நம்மையே சீர்திருத்தம் செய்துகொள்ளுவோம் என்று தீர்மானித்தோம்.

கான்வாஸ் சாய்வு நாற்காலியிலிருந்து—அவர் படிப்பின் பாரம் தாங்காமல் கான்வாஸ் ஒருபக்கம் கொஞ்சம் கிழிய ஆரம்பித்து இருந்தது—சோமு ஒரு பாட்டைப் பாடிக்கொண்டே சுறுசுறுப்பாய் எழுந்திருந்து குரல்போட்டார்: "பயல்களா குட்டிகளா, நமது நண்பர் ரமணி சொல்வதைக் கேட்போம். கொல்லைக் கிணற்று ஜலத்தைஇன்றைக்கே இறைத்து விடுவோம். உப்பு ஜலமாவது ஒழியட்டும். வாழை பட்டுப்போனாலும் போகட்டும்.

நானும் இந்த வேலையில் ஒரு கைக் கலந்தேன். குழந்தைகள், புஸ்தகங்களை வீசி யெறிந்துவிட்டு, சந்தோஷமாய் ஜலத்தை மொண்டு மொண்டு ஊற்றின.

"சோமு, இதுதான் சரியான சமயம். உன் பஞ்சதந்திரக் கதைகளைக் குழந்தைகளுக்குச் சொல்லேன். நரி வெள்ளரிப் பழத்தோட்டம் போட்ட கதையை."

இதெல்லவோ சரியான ஆரம்பக் கல்வி முறை என்று சோமுவே என்னை ஆமோதிக்க ஆரம்பித்துவிட்டார்.

பாதிக் கிணறு இறைத்தாய்விட்டது. கறிகாய்த் தோட்டமும் ஆரம்பித்தாய் விட்டது. அடுத்த சமயம் வரும்பொழுது ஒருவேளை சாப்பாட்டுக்கும், மந்திரிமார்கள்போல், நானும் திட்டம்போட்டு விட்டேன்.

வேலை முடிந்ததும் நாங்கள் எல்லோரும் கோவிலுக்குப்போய் நடராஜாவை தரிசித்தோம். சோமு, ரஸிகனுகையால், கோவிலின் சில்பஸ்ரீயையும் கவனித்தார்.

(568-ம் பக்கம் பார்க்க)

# வார நடப்பு

### போப் மரணம்

சென்ற வாரம் உலகத்தில் ஓர் துக்ககரமான சம்பவம் நடந்திருக்கிறது. அதுதான் போப் ஆண்டவர் மரணம். போப் ஆண்டவர் மரணத்தால் கத்தோலிக்க உலகம் ஒப்பற்ற குருவை இழந்து விட்டது. அது மட்டுமல்லாமல் உலகம் ஒரு சமாதான தூதரை இழந்து விட்டது. சென்ற திங்கட்கிழமை பிரேத அடக்கம் நடந்தது.

### யுத்த ஜுரம்

சர்வாதிகார - ஜனநாயக யுத்தஜுரம் ஒரு டிகிரிகூட அடிக்க ஆரம்பித்திருக்கிறது. இதாலியின் கோரிக்கைகளை சமாதானமாகத் தீர்க்காவிட்டால் யுத்தத்தால் அதைத் தீர்த்துக் கொள்வதாக உத்தியோகப் பற்றுள்ள ஒரு ரோம் பத்திரிகை கூறுகிறது. ஸ்பெயினில் பிரோங்கோ வெற்றி பெறும் வரை இதாலியத் துருப்புகள் அங்கே இருக்குமென்று பகிரங்கமாகக் கூறிவிட்டது.

### ஸ்பெயின் விஷயம்

ஸ்பெயின் போரில் விரைவாக பிரோங்கோ முன்னேறிக் கொண்டிருக்கிறார். அவர் பிரான்ஸுடனும் இங்கிலாந்துடனும் கொஞ்சம் சமரசப் பேச்சு வைத்துக்கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. நெருக்கடியைத் தீர்ப்பதற்காக தேசங்களின் தூதர்கள் குறுக்கும் நெடுக்குமாகப் போய் வருகிறார்கள். அவர்கள் என்ன பேசிக்கொண்டிருக்கிறார்கள், எப்படி அவர்கள் ஸ்பெயினுக்கு உதவி செய்யப் போகிறார்கள், ஸ்பெயின் சர்க்காரைக் கடைசியில் காட்டிக் கொடுக்கப் போகிறார்களா? என்பது மட்டும் மூடு மந்திரமாகவே இருக்கிறது.

### பிரிட்டிஷ் சர்க்காரின் அலுவல்

பிரிட்டிஷ் சர்க்கார் பாலஸ்தீன விஷயத்தில் மெய்மறந்து போயிருக்கிறார்கள். பாலஸ்தீன மகாநாட்டில் யூதர்களுடன் உட்கார்ந்து கொள்ள மறுத்து அராபியர் தனியாக ஆலோசனை செய்கிறார்கள். அராபியர்கள் தங்கள் கட்சியை எடுத்துச் சொல்லிவிட்டார்கள். யூதர்கள் சார்பாக வீஸ்மான் சாங்கோபாங்கமாக விளாசி விட்டார். அவர்களுக்கு பாலஸ்தீனத்தில் இடம் உண்டாம். சரித்திர சம்பந்தமான காரணங்களுடன் இதை விளக்கியாகிவிட்டது. அராபியர்களுக்குப் பூர்ண சுதந்திரம் கொடுக்கக் கூடாதாம். ஆனால் பாலஸ்தீனத்தில் அதிகாரம் செலுத்த யூதர்கள் விரும்பவில்லை. அவர்கள் சமதையாக வாழ உரிமை கேட்கிறார்கள் இப்படியாக வீஸ்மான் பேசினார். மகாநாடு விரைவில் முக்கிய பிரச்னைகளின் கழுத்தைப் பிடித்துக் குலுக்கி (அங்கத்தினர் கழுத்தை அல்ல!) ஒரு முடிவுக்கு வரும். பேச்சு ஒருபுறமிருக்க ஜெருஸலத்தில் குழப்பமும் இருந்து வருகிறது.

### சமஸ்தானப் போர்

இந்தியாவின் முக்கியப் பிரச்னை சென்ற வாரம் சமஸ்தானப் பிரச்னைதான். ராஜ்கோட்டில் உண்ணுவிரதம் இருந்த மணிபென் அதை விட்டுவிட்டார். அதிகாரிகள் அவரது வேண்டுகோளை ஒப்புக்கொண்டு விட்டார்கள். கஸ்தூரி பாயுடன் மணிபென் இருக்கலாமென்று அனுமதி தரப்பட்டது. கஸ்தூரி பாய்க்கு வைத்திய வசதி அளிக்கவும் ஏற்பாடாயிற்று. ராஜ்கோட்டில் அமைதியாக சத்யாக்ரஹப் போர் நடந்து வருகிறது.

---

(567-ம் பக்கத் தொடர்ச்சி)

தெய்வபக்தி உள்ளவராயிருந்தாலும் அவர் அடிக்கடி கோவிலுக்குப் போகிறதில்லை. எனக்கு பக்தி குறைவானாலும், கோவிலுக்குப் போவதை நான் குறைக்கவில்லை. சிறு பிராயம் முதற்கொண்டு காலணா கூடத்திற்கும் குறைவில்லை. இந்த கூடத்தால்தான் நான் எம். ஏ., பி. எல். பாஸ் செய்ததாக எனக்கு எண்ணம்.

அடுத்த சமயம் வரும் தேதியை தெரிவிக்கிறேன் என்று புன்சிரிப்புடன் என் நண்பர் சோமுவிடம் சொல்லி விடுதலை பெற்றுக்கொண்டு, பார்ஸல் பாஸஞ்சரில், நானும் ஓர் பார்ஸல் பாஸஞ்சராக, ஏறி உட்கார்ந்துகொண்டேன். காலையில் எழும்பூர் வந்து சேர்ந்தேன். பாரதமணி கவலை துவங்கிவிட்டது. ஒரு தோண்டி ஜலத்தை இழுத்துத் தென்னம் பிள்ளைக்குக்கொட்டினால் ஆகாதா! 'போகிற போக்கில்' எழுதுவதால் யாருக்கு என்ன லாபம்!

மணி.

டும் வட்டிகள், கிஸ்திபாக்கியின்மேல் ஏற்படும் வட்டிகள், மாகாண மீதங்களிலிருந்து வரும் வட்டிகள் முதலியன இதன்கீழ் வரும்.

17-வது அயிடம் நீதி நிர்வாகத்திலிருந்து வரும் வரவு. இதன் கீழ் பணமாக வசூல் ஆகும் கோர்ட் பீஸ், அபராதங்கள், வக்கீல் சனத் பீஸ்கள் முதலியனவரும். 18-வது அயிடம் ஜெயில்கள்; பத்தொன்பது போலீஸ். இருபது துறைமுகங்கள்; இருபத்திஒன்று ஒரு முக்கியமான அயிடம். அதுதான் கல்வி. 22-வது அயிடம் வைத்திய வரவு. மேலும் சில பின் வருவன.

23. சுகாதாரம்

24. விவசாயம்

25. தொழில்கள்

26. சில்லறை இலாகாக்கள்

30. பொது வேலைகள்

30-ஏ. நீர்வீழ்ச்சி மின்சார ஸ்தாபனங்கள்.

34. ஸ்டேஷனரி

35. மற்றதுகள்

39. மாகாணங்களுக்கும் மத்திய சர்க்காருக்கும் கணக்கு சரிகட்டுதலில் ஏற்படும் மிச்சங்கள்.

40. எதிர்பாராத வரவுகள்.

சாக்கார் வருமான இனங்கள் எல்லாம் இந்த நாற்பது தலைப்புகளின் கீழ்வந்து விடுகின்றன. இவற்றில் அகப்படாததே கிடையாது. செலவு தலைப்புக்கும் அப்படித்தான். 22-பொது நிர்வாகம் என்ற செலவு இனத்தின் கீழ் கவர்னர் சம்பளம் முதல் தலையாரி சம்பளம்வரை எல்லாம் அடங்கி விடுகின்றன. 24-நீதி நிர்வாகம் என்பதன்கீழ் நீதி இலாகா செலவு பூராவும் அடங்கி விடுகிறது. 45-ஏ என்பது வருமானத்திலிருந்து செலவு செய்யப்படும் கம்யூடேஷன் பணம் (அதாவது பென்ஷன் பெற்றவர்களுக்கு பென்ஷன் தொகையின் ஒரு பகுதியை முன் கூட்டியே மொத்தமாகக் கொடுக்கும் திட்டம். இதைத்தான் இப்பொழுது சர்க்கார் நிறுத்திவிட்டார்கள்.) 51 என்பது மத்திய சர்க்காருக்குக் கட்டும் கப்பம். 51-ஏ இரண்டு சர்க்காருக்கும் இடையே கணக்கு தீர்க்கப்படும்பொழுது செல்லாவாக வேண்டியதாக ஏற்படும் தொகை. 52, எதிர் பாராத செலவுகள்.

இவ்வளவு வரவு செலவு இனங்களின் கீழும் வரும் தொகைகளை மாகாணத்திற்குப் பூராவும் மொத்தம் போட்டு லாப நஷ்டக் கணக்கு எடுப்பதுதான் பட்ஜட் திட்டம். வரவுக்குமேல் செலவு தொகை ஜாஸ்தியாகத்தென்பட்டாமல் அதை நஷ்ட பட்ஜட் (Deficit Budget) என்பார்கள். வரவு ஜாஸ்தியானுல் அதை அதிகப்படி பட்ஜட் (Surplus Budget) என்பார்கள். இரண்டும் சரிகட்டிக்கொண்டுப் போய்விட்டால் சரிகட்டினபட்ஜட்டாகும் (Balanced Budget). செலவு அதிகமாகப் போனுல்தான் எப்பொழுதும் சரிகட்டுவது என்ற நிலைமையே ஏற்படும். அப்பொழுது சர்க்கார் எந்த இனங்களிலாவது வரும்படியை அதிகரிக்கலாம்; எந்த இனங்களிலாவது செலவைக் குறைக்கலாம்.

ஆனுல் பொதுவாக பட்ஜட் திட்டம் பத்துமாத முடிவான கணக்கிலிருந்து நிர்ணயிக்கப்படுவதால் சில நிரந்தரமான இனங்களில் மாறுதல்கள் இருக்காது. மற்றவைகளில் வரவு செலவு கொஞ்சம் மாறலாம். ஆனுல் அது ஒருக்காலும் எதிர்பாராத வண்ணம் அதிகமாகப் போகாது. ஏனெனில் திட்டம் தயாராகும் போதே வருஷத்தின் தன தானிய நிலையைக் கணக்கிட்டேதான் செய்கிருர்கள். உதாரணமாக பயிர்களின், நிலைமையை முன்கூட்டியே நிர்ணயித்துத் தான் நில வரி திட்டம் நிர்ணயமாகிறது. இந்த முறையில் பட்ஜட் என்பது மாகாணத்தின் வரவு செலவு திட்டம் மட்டுமல்ல; வாழ்க்கைத்திட்டம் கூடத்தான்.

---

கிராம சேவை:

# திண்ணையில்

(ராவ் சாகேப் கே. சுப்ரமண்யம்)

“தாத்தா! தொழிலாளிகள் வேலை நிறுத்தம், சண்டை, ரகளை, கூலிக் குறைச்சல், வாசவசதி, என்றெல்லாம்—பெரிய தகறார்களாயிருக்கின்றனவே, தொழில் எப்படி நடக்கும்? இப்பொழுது தான் நம் தேசத்தில் தொழில்கள் கொஞ்சம் ஆரம்பித்திருக்கின்றன. அவைகள் இன்னும் சரியான ஆதாரத்தோடு இல்லை. அதற்குள்ளேயே இந்தத் தகறார்கள். இந்த தொழிற்சாலைக்காரர்களுக்கும் கஷ்டமிருக்கிறது. தேசங்களுக்குள் போட்டி ஒரு பக்கம், இந்த தேசத்திலேயே ஒற்றுமை இல்லாத கம்பெனிகள் போட்டா போட்டி வேறு. தொழிற் சாலைகளில், முதலாளி-தொழிலாளி தகறார்கள்—இன்னும் எத்தனையோ கஷ்ட நஷ்டங்கள் எல்லாம் வந்து குறுக்கிடுகின்றனவே. வெளி தேசத்தார்கள் ஒவ்வொரு வகையில் ஒற்றுமையோடு கூட்டு (Combine) என்று ஏற்பாடு செய்து கொள்கிறார்கள். அதில் ஒருவருக்கும் நஷ்டமில்லாமல் பெட்ரோல் கம்பெனிகள், செய்கைப் பட்டுக் கம்பெனிகள், நீராவிக் கப்பல்கள் கம்பெனிகள்-இவைகள் எல்லாம் நடக்கவில்லையா? இங்கேதானே கேவலமாயிருக்கிறது!”

“ஆமாடா அப்பா! ஆமாம்! அந்த மாதிரி புத்தியில்லை நம் ஜனங்களுக்கு. அதற்குத்தான் சர்வாதிகாரி மாதிரி அதிகாரி தொழிலை நடத்திக்கொண்டு போக வேண்டும். நாமெல்லோரும் தொழிலாளிகளா யிருந்து லாபத்திலே பாகம் என்று ஒப்புக்கொண்டு வேலை செய்ய வேண்டும். வேண்டுமானால் முதலும் போடவேண்டும். இப்போது முனிஸிபாலிடிகளுக்கு நாம் தானே வரியாகக் காசு கொடுக்கிறோம். நம் காசினால்தானே அந்த முனிஸிபல் காரியங்கள் நடக்கின்றன. அந்த உத்தியோகஸ்தர்களும் பிழைக்கிறார்கள். அவர்கள் சொல்லுகிற சொல்லைத் தாண்டி நாம் போக முடிகிறதா? எவ்வளவோ பயத்தோடு நாம் நடந்துகொள்ளவில்லை? அந்த மாதிரி இந்தத் தொழிலிலும் நடக்க வேண்டும். சும்மா, எல்லாவற்றையும் முதலாளிகள் தின்றுவிடுகிறார்கள் என்று திடீர் என்று சொல்கிறது எனக்குப் பிடிக்கவில்லை. அவர்களுக்கும் எவ்வளவோ கஷ்டங்களிருக்கின்றன. அனுபவிக்கிறவனுக்குத் தெரியும். நம் பண்ணை வேலைக்காரன் கூட நம்ப பேரில் ரொம்ப அவஸ்தைதப்படுகிறான். நமது சமாசாரம் எப்படியிருக்கு? அவனுக்குச் சொன்னால் ஒப்புக்கொள்வனா? அவனுக்குத் தெரிகிறதா? போதாக்குறைக்கு யாராவது பட்டண வாசிகள் வந்து விஷயம் தெரியாமல் ஏதாவது சொல்லி வைக்கிறது. ‘பட்டணங்களிலே 8 மணி நேரம் வேலைக்கு ஆறு அணா கிடைக்கிறது. இந்த வயல்களில் நீங்கள் இரவும், பகலும், உழைத்தும் இந்த கூலி நெல்தானா?’ என்று ரொம்ப விசனமாய் துக்கம் விசாரிக்கிறார்கள். அப்படிச் சுலபமாகச் சொல்லுகிற ஆஸாமிக்கு நம்மைப்போல் கொஞ்சம் நிலமிருந்தால் தெரியும். முதலாளி தொழிலாளித் தகறார்கள் பெரிய புராணம். நாம் அதில் இப்போது நுழைய வேண்டாம். அந்த மாதிரி தகறார்களானால் நஷ்டங்கள் இல்லாமல் செய்கிறதென்றால் நாமே முதல் போடுகிறது; நாமே உழைக்கிறது; ஒரு நல்ல தெரிந்த ஆளை எற்படுத்தி அவன் சொல்கிறபடி நடக்கிறது. அப்படி ஆய்ந்து நன்றாக விசாலபுத்தியோடும் தூரதிருஷ்டியோடும் வேலைசெய்தால் லாபமடையலாம். நாமெல்லாரும் நெல்லிக்காய் மாதிரி சிதறிக் கிடக்கிறோம். சேர்த்துக் கட்டிப்பிடித்து வேலைவாங்கச் சரியான ஆசாமியை ஏற்படுத்திக் கொண்டால் நல்ல கதி உண்டு.”

“இப்போது, இன்னும் என்ன செய்தால் பணம் கிடைக்கும் சொல்லுங்கோ.”

“இதுவரையில் சொன்னது போக, நமக்குத் தென்னைமரங்கள் இருக்கிறதல்லவா? கற்பகவிருக்ஷங்கள் என்று முன்னே கேட்

# பட்ஜட் என்பது என்ன?

நாளையதினம் சென்னை சர்க்கார் அசெம்பிளியின் முன்பு 1939-40-ம் வருஷ பட்ஜட்டை சமர்ப்பிக்கிறார்கள். இந்த சமயத்தில் பட்ஜட் என்ன என்பதையும், வரவு செலவுகளின் முக்கியமான மாகாண அம்சங்கள் என்ன என்பதையும் கொஞ்சம் கவனிப்பது உபயோகமாக இருக்கும்.

பட்ஜட் என்பது சர்க்கார் வருஷமாகிய ஏப்ரல் முதல் தேதி முதல் மார்ச்சு 31-ம் தேதியுடன் முடியும் 12 மாதங்களின் முன் கூட்டிய வரவு செலவு திட்டம். அது அநேகமாக வருஷா வருஷம் பிப்ரவரி மாதம் கடைசி வாரத்தில் தயாராகும். அதில் நடைமுதல் வருஷத்தின் பத்து மாத முடிவான கணக்கை வைத்துகொண்டு திட்டம் போடப்படுகிறது. சென்ற வருஷத்து மறு திட்டமும் (Revised estimate) மூன்றும் வருஷத்து முடிவான கணக்கும்கூட (Actuals) ஒத்துப் பார்ப்பதற்காகக்கூடவே கொடுக்கப்பட்டிருக்கும்.

மாகாணத்தின் பல பாகங்களிலிருந்து பல இலாகாக்களி லிருந்தும் அந்தந்த தாலூகாவிற்கும் ஜில்லாவுக்குமாக பட்ஜட் திட்டங்கள் தயாராகி சர்க்கார் தலைமை காரியாலயத்திற்கு வரும். சென்னை செக்ரடேரியட்டில் பல இலாகாக்களின் தலைமைப் பிரிவுகளும் இந்த ஜில்லாக் கணக்குகளை ஒன்றுபடுத்திக் கூட்டி மொத்தம் போட்டு நிதி இலாகாவிற்கு அனுப்புவார்கள். சர்க்கார் நிதி இலாகாதான் பட்ஜட் தயாரிப்பதற்குப் பொறுப்பாளி; என்றாலும் உண்மையில் தாலூகா ஆபீஸ்தான் பட்ஜட்டை ஆரம்பிக்கும் அடிஸ்தாபனம்.

சர்க்கார் கணக்குகளில் வருமான இனங்களுக்கும் செலவு இனங்களுக்கும் வரிசைக் கிரமமாக எண்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இவை மூலம்தான் வரவு செலவு கணக்குகள் எல்லாம் தெளிவாக இனம் வாரி பிரித்துப் போடப்படுகின்றன.

சில முக்கியமான வரவு செலவு இனங்களை இங்கே விவரித்துச் சொல்லுவோம். வருமானத்தில் ஏ முக்கிய தலைப்புகள் (Principal Heads of Revenue) என்ற பிரிவின்கீழ் ஆறு இனங்கள் வருகின்றன. அவை இரண்டாம் அயிடமாகிய வருமான வரி, ஐந்தாம் அயிடமாகிய நிலவரி, ஆறுவது அயிடமாகிய கலால்வரி, ஏழாவது ஸ்டாம்பு கட்டணம், எட்டாவது காட்டிலாகா வருமானம், ஒன்பதாவது ரிஜிஸ்ட்ரேஷன்.

இந்த வரிகளின்கீழ் பல சில்லறை இனங்கள் இருக்கின்றன. உதாரணமாக நிலவரியின்கீழ் பின்வருவன. 1. சாதாரண நிலவரி 2. சர்க்கார் எஸ்டேட்டுகளின் விற்பனைத் தொகை 3. சர்க்கார் தரிசுகளின் விற்பனைத் தொகை 4. அதிகப்படி பட்டுவாடா திரும்பி வசூலாவது 5. சர்க்கார் செய்த வேலைகளுக்கு தொகை வசூல். இந்தத் தொகைகளின் மொத்தத்தில் மீண்டும் ரீபண்டு (வாபிஸ்) ஆகும் மொத்தத்தொகை போக பாக்கிதான் நிலவரி வருமானத்தொகை. இதே மாதிரியாக கலால் வரியின்கீழ் கள், சாராயம், அபின் முதலியவைகளின் குத்தகைத் தொகை, லைசென்ஸ்தொகை, இதைத் தவிர காலாகாலத்தில் வரிகட்டாததற்கு ஏற்படும் அபராதங்கள், ஒப்பந்தத்தை மீறின கேசுகளில் ஏற்படும் பறிமுதல்கள் எல்லாம் இந்த வருமானத்தில் சேரும்.

பி என்பது ரயில்வே வருமானம். சர்க்கார் நடத்தும் ரயில்வேக்கள் வரவும், சர்க்கார் பண உதவி பெற்ற ரயில்வேக்களிலிருந்து வரும் தொகையும் இதன் கீழ்வரும்.

ஸி என்பதன்கீழ் 13-வது அயிடமாகிய நீர்ப்பாசனம், நீர்ப்பாசாணங்கள் முதலிய பொது மராமத்து இலாகா வருமானங்களின் மொத்தம். இந்தப் பிரிவின்கீழ் பல முக்கியமான கிளைப்பிரிவுகள் இருக்கின்றன. அவற்றை மற்றொரு சமயம் கவனிப்போம்.

ஈ என்பதன்கீழ் வருவது 16-வது அயிடமாகிய கடன் ஸ்தாபன வரவுகள். அதை வட்டிக்கணக்கு என்று சொல்லலாம். சர்க்கார் கொடுக்கும் அட்வான்ஸுகள் கடன்கள் இவற்றின்மேல் ஏற்ப

டதைக் கொடுக்குமாம். இப்போது வருஷத்துக்கு ஒரு அரை ரூபாய் குத்தகை கொடுக்கிறது இல்லையா? அதிலிருந்து ஜாஸ்திப் படுத்த வேண்டும். கள்ளுக்கடை போய்விடுகிறதினாலே அதற்குக்கூட தகரூர்தான். நாமே வேலை செய்யலாம். கீத்து முடைகிறோம். தேங்காய் எண்ணெய் ஆகிறது. மாட்டுக்குப் பிண்ணாக்குக் கூட உண்டு. கொஞ்சம் ஈர்க்குச்சிகள் விளக்குமாறு ஆகிறது; கொஞ்சம் நார் கயிறுக்கு எடுத்துக் கொள்ளுகிறோம். இது போக இன்னும் என்ன ஸாமான் பாக்கி இருக்கிறதோ அதை உபயோகப்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்குக்கூட அந்த தொழில் டிபார்ட்மெண்டைக் கேட்டால் அவர்கள் ரொம்ப விசிதமாய்ச் சொல்லுவார்கள். எனக்குத் தெரிந்ததை நானும் சொல்லுகிறேன். இதிலே (1) தென்ன மட்டை (2) குரும்பை (3) தேங்காய் (4) பன்னாடை இம்மாதிரி இருக்கின்றன வல்லவா?

1. தென்ன மட்டை: கீத்தாக முடைந்தது போக, பாக்கியை என்ன செய்யலாம்? ஓலைகளை சிகப்பு சிமிட்டியில் நனைத்து பதம் செய்து ஓலைப் பெட்டிகள் செய்யலாம். ஈர்க்கை நன்றாய்ச் சீவி தட்டிகளாய்ப் பின்னலாம். அதற்குக் கலர்கள் கொடுத்து ஜப்பான் "ஜன்னல் ஸ்கிரீன்" மாதிரி செய்யலாம். ரொம்ப நாள் உழைக்கும். சுலபமான வேலையும்கூட.

2. உதிர்கிற பூ—குரும்பை: இவை துணிகளுக்கு வர்ணம் தோய்ப்பதற்கு ரொம்ப உபயோகமாகின்றன.

3. தேங்காயில்: (அ) மேல் மட்டையை ஊறப்போட்டு நார் எடுக்கிறோம். கயிறு திரிக்கிறோம். போக மிகுந்த நாரில் பிரஷ்கள் நன்றாய்ச் செய்யலாம். சுலபமும்கூட; நல்ல விலையும் போகும். கயிறு திரித்துப் பாயாகச் செய்யலாம்; வாசல்படி பாய்களாகவும் செய்யலாம் (Door mats). கலர் கொடுத்தால் நன்றாயிருக்கும். (ஆ) கொட்டாங்கச்சியை உடைத்துப் பொத்தான்கள் செய்யலாம் விதவிதமாய். மிகுந்ததை கொட்டாங்கச்சித் தைலம் செய்து வைத்தியத்துக்கு உதவும். புண்கள், சொரி சிரங்குகளுக்கு நல்லது. (இ) தேங்காய்ப் பருப்புகள் தின்னதுபோக, பாக்கி எண்ணெய்யை சோப் செய்து உபயோகப் படுத்தலாம்.

4. பன்னாடையைச் சரியாய் பதம் பண்ணினால் சாமான்கள் 'பாக்கிங்' செய்ய ரொம்ப உபயோகம். இதிலிருக்கிற நார் ரொம்ப உறுதியானது. இந்தப் பன்னாடை சின்னச்சின்ன பெட்டிகள்செய்ய உதவும். இதையும்பாளையையும் சிகப்புச்சிமிட்டியில் நனைத்துப் பதன் பண்ணினாலும் ரொம்ப நாள் உழைக்கும். தோல் மாதிரி உறுதி. இந்தமாதிரி சாமான்கள் சாதாரணம்தான். ஆனால் விற்பனைக்குத் தயார் பண்ணுகிறதுதான் சாமர்த்தியம். செப்பிடு வித்தை பண்ணவேண்டும். விளம்பரம் தடபுடலாயிருக்கவேண்டும். பார்வைக்கு அழகாயிருக்கவேண்டும். பிரசாரம் செய்கிற ஆள்களும் சரியானவர்களாயிருக்கவேண்டும். இதெல்லாம் நாமே நம் வீடுகளில் செய்யலாம். நல்ல விற்பனைக்குத்தான் ஏற்பாடுகள் செய்யவேண்டும். இந்தத் தென்னை மரத்திலே வருஷம் 1-க்கு மரம் 1-க்கு சராசரி செலவு போக ஒரு ரூபாயாவது அதிகப்படும். உனக்கு ஐம்பது மரமிருக்கிறதே, அதிலே 50 ரூபாயாவது கிடைக்கும். இந்த வரும்படி எல்லாம்போக பாக்கி எவ்வளவு துண்டு விழுகிறது?"

"இன்னம் சுமார் 35 ரூ. போலே இருக்கும் துண்டு!"

"உன் ஆம்படையாள் எருமை மாடு வைத்துக்கொண்டிருக்கிறாளே, அதிலே சிலவுபோக எவ்வளவு மீரும்? மாட்டுக்கு ரூ. பத்து மீரும். ஆக ரூ. இருபது ஆச்சா? இன்னும் பதினைந்து ரூபாய் போலத் துண்டு விழுகிறதல்லவா? இதற்கு நீ நூல் நூற்று துணி செய்துகொள்ளலாம். உன் வீட்டுக்குவேண்டிய துணிபோக பாக்கியை விற்றும் விடலாம். நூலாகவே விற்றாலும் விற்றுவிடலாம். உன் வீட்டிலிருக்கிறவர்கள் எல்லாரும் செய்யலாம். எல்லாருக்கும் சேர்ந்து தினம் இரண்டு அணா குறைந்தது கிடைக்கும். வருஷத்துக்கு 200 நாள் செய்கிறதாக வைத்துக்கொண்டால் கூட ரூ. 25 கிடைக்கும்.

# கிராமப் புத்தகசாலைகள்*

(ஸ்ரீ எஸ். ஆர். ரங்கநாதன், எம்.ஏ., எல்.டி., எப். எல். ஏ.)

புத்தகசாலைகள் முக்கியமாக நகரங்களுக்கு உரியன வென்றும், நகரங்களில் தான் காணப் படுமென்றும் சிலர் எண்ணலாம். ஆனால் நகரம் நிரம்பிய இங்கிலாந்தில் கூட, அவ் வெண்ணம் தவறு என்பதை உணர்ந்து புத் தகசாலை வசதி அற்ற கிராமமே இல்லாமல் செய்திருக்கிறார்கள். நம் தமிழ் நாடோ கிராம மயமான நாடு. தமிழ் மக்கள் சங்கியை இரண்டு கோடி. அதில் ஒன்றே முக்கால் கோடி கிராமவாசிகள். ஆகையால் தமிழ் மக் களின் முன்னேற்றத்தையோ, அவர்களுக் கென்று செய்யப்படும் வசதிகளையோ சீர்தூக் கின், அவைகள் கிராமங்களுக்கு எட்டின லல்லது பிரயோசனம் அற்றவை ஆகும்.

சென்னை நகரத்தில் லக்ஷம் புத்தகங்க ளுள்ள மூன்று புத்தகசாலைகள் உள்ளன என்பதால், தமிழ் மக்களுக்குப் புத்தகப் பஞ்ச மில்லை என்று சொல்ல முடியாது. முதலா வது, இந்த மூன்று லக்ஷம் புத்தகங்களில் 1000-க்குமேல் தமிழில் இல்லை. ஆனால் 100-க்கு 99 தமிழ் மக்களுக்குத் தமிழ்பாஷை தவிர வேறு பாஷை தெரியாது. இரண்டா வது, இருக்கும் சொற்பத் தமிழ்ப் புத்தகங் களையும் கிராமவாசிகள் கையில் சேர்க்க ஒரு வித ஏற்பாடும் இல்லை. இக்குறை பெருங் குறை. இக்குறை எப்படித் தீரும்?

வெளிநாடுகளில் கிராமப் புத்தகசாலை இயக் கம் எப்படி இருக்கிறதென்று சற்று விசாரிக்க லாம். பிரதி கிராமத்திலும் விநியோகம் செய்ய ஜில்லாப் புத்தகசாலைகளை ஸ்தாபித் தது. மந்திரிமார்களும் சட்டசபை அபேக்ஷ கர்களும் கிராமப் புத்தகசாலைகளுக்குச் சாதகம் செய்தால் வோட் கிடைக்கும் வழியாகிறது என்பதை உணர ஆரம்பித்தார்கள். இதன் பலன், இப்பொழுது ஒருவன் இங்கிலாந்தில் எந்தப் பட்டிக்காட்டிலிருந்தாலும் எந்த மூலை முடுக்கில் வசித்தாலும் வேண்டு மென்று நினைத்த எப்புத்தகத்தையும் எளி தில் இலவசமாக அடைகிறான்.

இன்னொரு நாட்டை எடுத்துக்கொள் வோம். இது அமெரிக்காவில் மேல் சமுத் திரக் கரையில் உள்ள காலிபோர்னியா என் னும் நாடு. இந்நாட்டில் 58 ஜில்லாக்கள் உள்ளன. 1911ஆ ஏற்பட்ட சட்டத்தால் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஜில்லாப் புத்தக சாலைகள் ஏற்பட்டன. கிராமவாசிகளுக்குப் புத்தக விநியோகம் செய்யும் இந்த 58 ஜில் லாப் புத்தகசாலைகளுக்கும், வழிகாட்டியும், சக்தி ஸ்தானமாயும், மூலதனமாயும் ஒரு சர்க் கார் புத்தகாலயம் தலைநகரில் அமைக்கப்பட் டது. இந்த சர்க்கார் புத்தகாலயம் நாட்டி லுள்ள புத்தகங்களுக் கெல்லாம் ஒரு பொதுப் பட்டியை வைத்துக்கொண்டு ஒரு ஊரில் தூங்கும் புத்தகங்களை மறு ஊருக்கு மாற்றி, சிக்கனமாயும் ஜரூராயும் புத்தக விநியோகத் தைச் சீர்ப்படுத்தி வருகிறது.

இப்படிப் புத்தகசாலை இயக்கத்தை சட்டத் தாலும், தன் ஒத்தாசையாலும், மனுஷ்யக் கட்டுக்கோப்பினாலும், அபிமானத்துடன் துவக்கிக் கொடுத்தால், ஜனங்கள் எவ்வளவு ஆவலுடன் பெருக்கிக் கொள்வார்கள் என்பது இந்நாட்டு அனுபவத்திலிருந்து விளங்கும். உதாரணமாக ஒரு ஜில்லாவை எடுத்துக் கொள்வோம். அதன் பெயர் மாண்டரே. அதிலுள்ள மக்கள் 30,000. ஜில்லாப் புத்தக சாலை ஆரம்பித்த வருஷத்தில் 2000 புத்த கங்கள்தான் இருந்தன. அவைகளை உப யோகிக்க 500 பேர்தான் முன் வந்தார்கள். ஆனால் ஜில்லாப் புத்தகசாலை அதிகாரி கிரா மம் கிராமமாய் சஞ்சாரம் செய்து ஜனங் களின் உணர்வை உயர்த்தினான். படிப்பின் பலனை பிரசுரப்படுத்தினான். வீடு வீடாய்ச் சென்று மக்களிடம் வாதாடிப் பழக்கினான். 6 வருஷத்தில் 7000 மக்கள் படிக்க ஆரம் பித்தனர். அதற்குள் புத்தகங்களும் 30,000 ஆயின.

இன்னும் சில நாடுகளில் கிராமப் புத்தக சாலைகளின் செழுமை ஆச்சரியமானது. ருமானியாவில் 3000 கிராமங்களுக்கும், யூகோஸ்லோவியாவில் 1000 கிராமங்களுக் கும் புத்தக விநியோகம் நடக்கிறது. போலண்டில் 15,000 கிராமங்களுக்குப் புத் தக வசதி செய்ய ஏற்பாடு ஆகி வருகிறது. ருஷ்யாவில் ½ லக்ஷம் கிராமங்களில் புத்தக சேவை நடக்கிறது. அதன் பலன், 20 வரு ஷத்திற்கு முன் 100-க்கு 70 பேர் படிப் பற்றவராய் இருந்த தேசத்தில், இப்பொழுது 100-க்கு 80 பேர் படிப்பாளியாய் விட்டார்

---

* ரேடியோப் பிரசங்கம்.

கள். ஸ்வீடனிலும், டென்மார்க்கிலும், ஒவ்வொரு ஜில்லாவிலும் ஜில்லாப் புத்தகசாலைகள் அமைந்திருக்கின்றன. இன்னும் சில பிரத்யேகப் புத்தகசாலை வைப்பது அனுகூலமில்லை என்று அனுபவத்தில் கண்டுபிடித்திருக்கிறார்கள். பின் என்ன செய்கிறார்கள்? ஒவ்வொரு ஜில்லா போர்டும் ஒரு ஜில்லாப் புத்தகசாலையை ஏற்படுத்தி, அதிலுள்ள புத்தகங்களை மாதந்தோறும் கிராமம் கிராமமாய் கொடுத்து வாங்குவதே சிக்கன வழி யென்றும் சாத்தியமானதென்றும் கண்டு அதைக் கையாண்டு வருகிறார்கள். இவ்வித அனுகூல வழியைக் கையாளப் பிரத்யேக புத்தகசாலைச் சட்டத்தையே ஆதாரமாய்க் கொண்டு வருகிறார்கள்.

முதலில் இங்கிலாந்தை எடுத்துக்கொள்வோம். 1919 ஷுத்தில் பிறந்த சட்டத்தில் ஒவ்வொரு ஜில்லா போர்டுக்கும் கிராமவாசிகளின் இலவச கைங்கரியத்திற்காக ஜில்லாப் புத்தகசாலையை வைத்து நடத்த அதிகாரம் உண்டாயிற்று. தன் வரும்படியில் ரூபாய்க்கு ஒரு தம்படி வீதம் இப்புத்தகசாலைக்கென்று ஒவ்வொரு ஜில்லா போர்டும் ஒதுக்கி வைக்கிறது. சர்க்காரிலும் அதற்குச் சமமான பண உதவி செய்கிறார்கள். தவிர, புத்தகசாலை இலாகா மூலமாய், ஜில்லாப் புத்தகசாலையை சரிவர நடத்தவேண்டிய மார்க்கங்களை பரிசீலனை செய்து கண்டுபிடித்து ஜில்லாப் புத்தகசாலை அதிகாரிகளுக்குக் கற்பித்து, அவர்களை உத்ஸாகப்படுத்தி, உதவுகிறார்கள். கேவலம் தர்மத்திற்கும், தனி மனிதர்கள் உத்ஸாகத்திற்கும் மட்டும் இந்தக் காரியத்தை விடுகிறதில்லை.

அவர்கள் அதிர்ஷ்டம் கார்னீஜீ என்கிற கோடீஸ்வரன் தன் சிலவில் கொஞ்ச காலம் நான்கு ஜில்லாப் புத்தகசாலைகளை நடத்தி ஜனங்களுக்கு அதில் அபிருசியை உண்டு பண்ணினன். அதனல் ஒவ்வொரு ஜில்லா போர்டும் "நான் முந்தி" "நான் முந்தி" என்று போட்டியுடன் 1919 ஷுத்திய சட்டத்தை அனுஷ்டிக்க ஆரம்பித்தது. கிராமவாசிகளுக்கு தேசத்திலுள்ள இலவசப் புத்தகம் வழங்கப்படும் சங்கியை பின்வருமாறு: ஜனநெருக்கமில்லாப் பின்லெண்டு 1000, பனிக்கட்டியில் அகப்பட்ட நார்வே 1000, பிராசீன இடாலி 2000, சின்னஞ்சிறு பெல்ஜியம் 2000, நமது பிராந்தியத்திலுள்ள ஜப்பான் 5000. இவ்விதமான சம்பூர்ணக் கிராம புத்தகசாலை இயக்கம் தமிழ்நாட்டில் ஏற்பட்டால், அது எப்படி நடைபெறும் என்று ஊகிப்போம்.

11 தமிழ் ஜில்லாவிலும் 11 ஜில்லாப் புத்தகாலயங்களிருக்கும். சென்னைச் சர்க்காரின் புத்தகசாலை அதிகாரி அவைகளை அடிக்கடி மேல் பார்வையிட்டு, அனுகூலமான யுக்திகள் சொல்லி, வாக்குச் சகாயம் செய்து, தாரதரம் அறிந்து பண உதவி செய்து, உத்ஸாகப்படுத்தி, ஒவ்வொரு மக்களும் படித்துத் தானே அறிவை விருத்தி செய்வதில் ஈடுபடுகிறவரையில் ஓய்வில்லாமல் உழைக்கும்படி செய்வார்.

ஏதாவது ஒரு ஜில்லாவைக் கவனித்துப் பார்ப்போம். தஞ்சை ஜில்லாவைக் கவனிப்போம். அதில் 2500 கிராமங்கள் உள்ளன. அவைகளில் 20 லக்ஷம் ஜனங்கள் வசிக்கிறார்கள். ஆகையால் மேற்கு நாட்டார் திட்டப்படி அந்த ஜில்லாப் புத்தகாலயத்தில் 10 லக்ஷம் புத்தகங்களாவது இருக்கவேண்டும். அதற்குப் பதிலாக கேவலம் ஒரு லக்ஷம் புத்தகங்களாவது சேர்ந்திருப்பதாக வைத்துக்கொள்வோம். இப்புத்தகங்களை நாளடைவில் வாங்கவும், விஷய வாரியாகப் பிரித்துப் பட்டி செய்யவும், கிராமவாசிகளுக்குத் தக்கவாறு பொறுக்கி அனுப்பவும், அடிக்கடி கிராமங்களுக்குச் சென்று, ஜனங்களின் மனோபாவத்தையும், அவசியத்தையும் அறிந்து, தன்னுடைய வியக்தி வைபவத்தால், அவர்களுக்குப் புத்தகங்களில் ஆவலூட்டி அவைகளைப் படித்தோ, படிக்கக்கேட்டோ அனுபவிக்க வழிகாட்டவும், சிப்பந்திகள் புத்தகங்களை விநியோகம் செய்யும் முறையைச் செப்பனிடவும், ஜில்லாப் புத்தகசாலை அதிகாரி அத்யாவசியம்.

அவர் நல்ல படிப்பாளியாயும், புத்தகாலய முறைகளில் நிபுணராயும், மக்கள் தொண்டில் ஈடுபட்டவராயும், தேச பக்தி ததும்புகிறவராயும், கேவலம் சுயநலத்திலும் மேலதிகாரிகள் பூஜையிலும் மாத்திரம் மயக்கங் கொள்ளாதவராயும், விடாமுயற்சி உள்ளவராயும், இருக்கவேண்டும். இப்படிப்பட்ட வியக்தியை நியமிக்கச் சோம்பியோ அல்லது நியமித்தும் அவருக்குத் தகுந்த அளவிற்கு சுவேச்சாதிகாரம் கொடுக்காமல் அவரை சதா தேஜோவதம் செய்தோ முக்கிய விஷயத்தையே அடிப்படையாய்க் கெடுத்த அனுபவங்கள் உலகத்தில் பல. அதனல்தான் சூடுகண்ட பூனையைப்போல் மேல்நாட்டார் தற்காலத்தில் கிராம புத்தகாலய இயக்கத்திற்கு முக்கிய கருவியாய் ஜில்லா புத்தகாலய அதிகாரியைக் குறிக்கிறார்கள்.

தஞ்சாவூர் ஜில்லாவில் அவ்வித குணம் வாய்ந்த ஜில்லாப் புத்தகாலய அதிகாரி இருப்பதாய் வைத்துக்கொள்வோம்.

தஞ்சை நகரிலுள்ள புத்தகங்கள் 2500 கிராமங்களில் பரவியிருக்கும் 20 லக்ஷம் மக்களின் கைகளில் எப்படிச் சேருவது? அவர்

களுக்குள் அவைகள் அடிக்கடி கை மாறுவது எப்படி? கிராமவாசிகள் ஒவ்வொருவரும் பிரதி மாதமும் தஞ்சை வரமுடியாது. ஆகவே ஒரு வழிதான் உண்டு. ஜில்லாவை சுமார் 500 கிராமங்களடங்கிய ஐந்து வட்டாரங்களாய்ப் பிரிக்க வேண்டியது. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒவ்வொரு புத்தக மோட்டார் ஏற்படுத்த வேண்டியது. இம் மோட்டார் மாத ஆரம்பத்தில் சுமார் 3000 புத்தகங்களை ஏற்றிக்கொண்டு தஞ்சையிலிருந்து கிளம்பி கிராமம் கிராமமாய்ப் போய் புத்தகங்களைக் கொடுத்து வாங்கிக்கொண்டு மாத இறுதியில் தஞ்சை வந்து சேரவேண்டியது.

முதல் வட்டாரத்தில் மாதிரிமங்கலம் கிராமத்தில் இது விஷயமாய் என்ன நடக்கிறது என்று சற்று கவனிப்போம். மோட்டார் கொண்டு வந்துதவிய புத்தகங்களைக் கிராம உபாத்தியாயர் பெற்று, தன் பள்ளிக்கூடத்தில் வைத்துக்கொண்டு வேண்டுபவர்களுக்கு வழங்குகிறார். வேண்டாதவர்களுக்கு ஆசையை ஊட்டுகிறார். புத்தக மோட்டாரை எதிர்பார்க்கும் தினம் காலையில் ஜனங்களிடமிருக்கிற புத்தகங்களை எல்லாம் திரும்பி வாங்கி ஒன்று சேர்த்து ஆஜர் செய்கிறார். புத்தக வண்டி வரும் காலத்தை கிராமம் முழுவதும் பிரசாரம் செய்து, அச்சமயம் எல்லோரும் வந்து சேரும்படி சொல்கிறார்.

புத்தக மோட்டார் வருகிறது. அதிலுள்ள புத்தக அலமாரிகள் திறக்கப்படுகின்றன. மக்கள் திரள் திரளாய் அவைகளை அணுகுகிறார்கள். அதிலுள்ள 3000 புத்தகங்களையும் இஷ்டப்படி கையாளுகிறார்கள். பிடித்த புத்தகங்களைப் பொருக்கிக் கிராம உபாத்தியாயரிடம் பொதுக் கட்டுகிறார்கள். கிழவர்கள், சிறுவர்கள், மாதர்கள், குடியானவர்கள், தொழிலாளிகள் ஒரே கூட்டம். ஒரே சந்தோஷம். "இதைப் பார் அழகான பொம்மைப் புத்தகம்" "இதோ ஹிட்லர் சரித்திரம்." "ஆகா! காந்தி சூத்திரம் வந்து இருக்கிறது." "இதோ அழகான பிராணி சாஸ்திர நூல்." இதோ "சர்க்கரை காய்ச்சும் புது வழி." இதோ "புதிய அரசியல் திட்டங்கள்" என்கிற கோஷம்.

வட்டாரப் புத்தகாலய உதவி அதிகாரியும், ஜனங்களுடன் உத்ஸாகமாய் கலந்து கொள்கிறான். புதுப் புத்தகங்களை எடுத்துக் காட்டுகிறான். அவர்கள் ஊக்கத்தை அதிகப்படுத்துகிறான். அவர்கள் மனப்பான்மையை அறிகிறான். அடுத்த மாதம் எவ்விதப் புத்தகங்களைக் கொண்டு வர வேண்டுமென்று தெரிந்து கொள்கிறான்.

ஒரு ஊமைப் பெண் காகிதமும் கையுமாய் அவனிடம் வருகிறது. அவர்களுள் எழுத்தால் பேச்சு நடக்கிறது. "நான் ஊமை." "உனக்கு என்ன வேலே?" "நெல் குத்துகிறேன். சாயங்காலத்தில் படிக்கப் புத்தகம் வேண்டும்." "என்ன பிடிக்கும்?" "செய்யுள் புத்தகம்! பணியாரங்கள் செய்யும் வகைகள். குழந்தை வளர்க்கும் வழி." மூன்று புத்தகங்களை எடுத்து அவள் உபாத்தியாயரிடம் பொதுக் கட்டுகிறாள். ஊர்த் தலேயாரி வருகிறான். "ஐயா! தென்னந்தோப்பில் ஒரு வண்டு விழுந்து நாசம் செய்கிறது. அதைத் தடுக்க வழிசொல்லும் புத்தகம்" என்கிறான். ஊர் இடையன் வருகிறான். "பக்கத்துக் கிராமத்தில் கோமாரி. கோமாரியைப் பற்றிய புத்தகம் உண்டா?" என்கிறான். ஒரு ஆதித்திராவிடன் நந்தன் சரித்திரம் கேட்கிறான். ஒரு பெண்மணி "கட்டை வண்டி நாடகம்" என்கிறாள். உபாத்தியாயர் "புத்தகாலயச் சாஸ்திரப் பஞ்ச சூத்திரம்" என்கிறார். தள்ளாத கிழவன், படிக்கத் தெரியாதவன் வருகிறான். "சாமீ தண்டம்! இந்த மாதம் வாத்தியார் ஐயா படித்துக் காட்டின 'பக்தவிஜயம்' ரொம்ப நல்லா இருக்கு. எல்லோருக்கும் ஆனந்தம். அது இன்று முடியவில்லே. இன்னும் ஒரு மாதம் இங்கேயே இருக்கட்டுங்க. பெண் பிள்ளேகளெல்லாம் கேட்டுக்கிறுங்க" என்கிறான்.

மணி ஆய்விட்டது. புத்தக பீரோக்கள் மூடப்படுகின்றன. மோட்டார் சாத்தப்படுகிறது. சத்தம் போடுகிறது. "அடுத்த தடவை ஞாபகமாய் 'மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை'" என்கிறார் தமிழ்ப் புலவர். "அருட்பா" என்கிறார் இன்னொருவர். "மின்சார சக்தி" என்று ஒரு மில்காரன் கேட்கிறான். "Radio for Everybody அவசியம் கொண்டு வாரும்" என்கிறார் பட்டா மணியக்காரர். வண்டி கிளம்பிவிட்டது. "தமிழில் முடியுமா? ஸார்" என்று கூவுகிறான் ஒரு வாலிபன். "அவசியம் கொண்டுவருகிறேன். அடுத்தமாதம் பார்ப்போம். இப்பொழுது போய் வருகிறேன். நமஸ்தே."

# ஸினிமா பார்த்தபின் !

(ஸ்ரீ. ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ., பி. எல்.)

"ஏன் அப்பா ! கிழவி எல்லாம் கிருஷ்ணன்தானே ?"

"என்ன ?"

"பிச்சக்காரி ?"

"ஆமாம்"

"கிழவி ? கிருஷ்ணன்தானே ?"

"என்னடா ! நீ சொல்வது ஒண்ணும் புரியல்லே. கிழவியாவது, கிருஷ்ணனுவதுடா ? கிருஷ்ணன் எங்கேடா வந்தானிங்கே ! வந்ததும் வராததும் என்ன கேள்விடா இது ?"

"நீ துக்காராம் பாத்தியோ இல்லையோ அப்பா ?"

"நான்தான் உன்னை அழைத்துக் கொண்டு போனேனே. நீ கூட பாதியிலே தூங்கினயே."

"நான் தூங்கல்லே அப்பா. நீதான் தூங்கினுப்லே இருக்கு. பின்னே ? கிழவி-பிச்சைக்காரி—துக்காராம்கிட்டே சோளம் கேட்டாளே அவள்—கிருஷ்ணனுப் போகல்லே? என்ன அப்பா நீதானே எனக்குச் சொன்னே, அந்த கிருஷ்ணன் தான் கிழவி ரூபமா வந்திருக்கான்னு. உடனே புல்லாங்குழல் கூடக் கேட்டுதே. அது இன்ன ராகம்னு புரியல்லேன்னியே அப்பா. என்ன அப்பா அதுக்குள்ளே மறந்துட்டே."

"பேஷ்! பேஷ், இங்கேவாடா தங்கமே. நல்ல ஞாபகம்டா உனக்கு. சரிதான். சரிதான். கிருஷ்ணன்தான் அதற்கென்ன சந்தேகம். உங்க அம்மா எங்கிடா காணும்? ஏண்டா கண்ணே அழரே ? இங்கேவா. இதென்னடா இது? என்னடா இப்படி அழரே ? உங்க அம்மா எங்கேடா ? அடே மணி! சொல்லிவிட்டு அழடா. ஆரடா அடிச்சா? நான்தான் நீ கேட்டதுக்கு பதில் சொல்லிவிட்டேனே. ஸினிமாலே நான்தாண்டா தூங்கினேன். நீ தூங்கல்லேடா. கண்ணே இங்கே வா !"

"இல்லை அப்பா. அம்மா வந்து—"

"அப்படிச் சொல்லு. ஏதோ நடந்திருக்கு. இல்லாப்போனு குழந்தை இப்படி அழுவட்ணு ? என்னடா பண்ணிவிட்டா ? இதோ வந்துட்டாளே எங்கேயிருந்தோ ! எங்கே போய்ட்டு வராப்லே? கொழந்தையை என்னடி பண்ணினே ?"

"கொழுந்தை என்ன பண்ணித்து கேட்டேளா ?"

"என்ன பண்ணித்து ?"

"என்ன பண்ணித்தா ? இந்த கொழந்தைக்கு அழகை வேறே ! இதுக்கு சிபார்சு வேறயா ? இந்த கொழந்தையை உரல்லே வச்சு நெசுக்கணும். செக்குலே வச்சு திரிக்கணும். கொழந்தையைப் பாரு கொழந்தையே !"

"ஏண்டி மறுபடியும் அடிக்கிறே ? என்ன பண்ணினன் ?"

"சொல்லேண்டி செல்வக் கொழந்தே ! உங்கப்பா உனக்கு உருகருரேடா. இந்த ஒரு பொடவே வாங்கப்பட்ட பாடு ஈச்வரனறிஞ்சு போச்சு. மாமியாருக்கு மாமனருக்குப் பொய் சொல்லி அங்கெ பாத்து இங்கெ பாத்து இத்தனை வருஷம் கழிச்சு ஒரு பொடவே தீவாளிக்குன்னு உங்கப்பா கையாலே—ஈச்வரனுக்கே ஸகிக்கல்லே. ஆத்துக்காரர் சம்பாதிக்கலாம் பொண்டாட்டிக்கு பொடவே வாங்கி கொடுக்கலாமோ! அப்பவே ஆத்தோடே ஒண்ணு வந்துருக்கே, அது வயத்தை எரிஞ்சுது. மூஞ்சிலே பத்ரகாளி தாண்டவமாடினு. அப்பவெ தெரியும் எனக்கு—இது நமக்கு தக்காதுன்னு.

"என்னடி நடந்தது ? புடவையை மணி என்ன பண்ணுன் ? வாசல்லே கீசல்லே கொண்டுபோய்ப் போட்டானு! புடவையை கொடிலேதானே ஒணத்திருந்தே ?"

"உங்க புள்ளைக்கு அதெல்லாம் சாமர்த்தியம் தெரியாதா என்ன ! கொடிலே காஞ்சுண்டிருந்த புடவையை ஒணத்தர கம்பாலே கெந்தி எடுத்து வாசல்லே போர பிச்சக்காரிக்கு தானம் பண்ணிப்பிட்டான்."

"ஏன் அப்பா! பிச்சக்காரி எல்லாம் கிருஷ்ணன்தானே ?"

# நிச்சிதார்த்தம்

("ரஸிகன்")

[தலையூர் என்பது ஓர் சிறுபட்டணம். அதில் அக்கிரகாரத்தில் தெற்கு பார்த்த வீடு, பெரிய கூடமும், காற்றுக் கொட்டகை போட்ட முற்றமும் கொண்டது. தாழ்வாரத்தில் சுமார் 40 வயதிருக்கும், ஒருவர் உட்கார்ந்திருக்கிறார். பக்கத்தில் வெற்றிலைப் பெட்டி, கை வழக்கத்தை யொட்டி கொட்டைப்பாக்கைச் சீவின படியிருக்கிறதே யொழிய சீவலை வாயில் போட்டுக் கொள்ளவில்லை. ஏதோ ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டு, சற்று மனக்கலக்கம் அடைந்தவர் போல் காணப்படுகிறார். அவர் அந்த ஊருக்குப் பத்து மைலில் இருக்கும் ஒரு கிராம வாஸி. ராமுவய்யர் என்று பெயர். சொற்ப பூஸ்திதியுள்ளவர். அவருக்கெதிர்த்தாப்போல் கூடத்துத் தூணில் சாய்ந்து கொண்டு 35 வயதிருக்கும் முங்காமடி யுடுத்த ஒரு கைம்பெண் நிற்கிறாள். பத்து ஆஸாமிகள் சொன்னபடி கேட்கிறதற்குள்ளவர்களுக்கு சகஜமாயுள்ள அதிகாரமும், அஹங்காரமும் அவள் தோற்றத்தில் காணப்படுகின்றன. அவள்தான் அந்த வீட்டு எஜமானி லக்ஷ்மியம்மாள். மாலை சுமார் நாலு மணியிருக்கும்.]

லக்ஷிமி அம்மாள்—என்ன, அத்தான், அப்பரம் என்ன சொல்ரேள், ரயிலுக்கு நாழியாச்சே?

ராமுவய்யர்— (இழுத்தார்ப்போல) —என்னத்தெச் சொல்ரது?

ல—ஏன்! ஓங்களுக்குப் பையன் பிடிக்கல்லையா, ஓங்காம்படையாளுக்குப் பிடிக்கல்லையா?

ரா—ஆம்படையா அபிப்பிராயத்தை ஆம்படையாளென்னு கேழ்க்கணும்.

ல—அது கடக்கட்டம், ஓங்க சமாசாரத்தைத்தான் சொல்லுங்கோளேன்.

ரா—பய்யந்தான் ஒருமாதிரியா இருக்கானேன்னு யோசிக்கிறேன்.

ல—(கோபத்துடன்) அப்பொ ஸரி. குசாலா வேரெ மாப்பிளை தேடிப் பார்த்துண்டு வாருங்கோ. (கொஞ்சம் உதாசீனமாய்) மூணுவருஷமாத்தான் மாப்பளைபாக்கரேன், பாக்கரேன்னு கிழக்கு மேற்கே போயிட்டு வந்தாச்சு. இந்த வருஷமும் கலியாணம் பண்ணுட்டா அப்பரம் அக்கிராரத்திலே குடியிருக்கவேண்டாம். பையனுக்கென்ன குத்தம்? அதுக்கென்ன சித்த மானரமா, குளுக்குக் குளுக்குன்னு இருக்கான்—நம்பாத்து வெங்குட்டு இல்லையோ! வயசு 26 தான் ஆரது......

ரா—ஜாதகப்படியே 31 முடிந்து 32 பிறந்திருக்கிறது.

ல—இருந்தாயென்ன? அது ஒரு வயசா? ஒவ்வொத்தர் கூடைக்கிழத்துக்கு வாக்கப்படராளே! சின்னஞ் சிறுபையன். பி. எல். பாஸ் பண்ணிருக்கான். ஒரு இஞ்சணக்கம் பிஞ்சணக்கம் கிடையாது. ஆயிர ரூபாய் எழுதி கொடுத்தாப்போறும். அவர் மாமா வக்கிலா மாசம் 2000 ரூபாய் சம்பாதிக்கிறார். பய்யனை முன்னுக்குக் கொணந்துட மாட்டாரா!

ரா—சம்பாதிப்பது அதிர்ஷ்ட வசமன்ஞ? அரை வயத்துக் கஞ்சிக்கு வழியிருந்து கொடுத்தாத் தேவலை. வக்கீல் தொழிலை நம்பி என்ன பண்ரது? காசுக்கு ரெண்டு வக்கிலாயிருக்கே.

ல—சரி, ஒங்க கோணக் கக்ஷிக்கெல்லாம் பதில் சொல்ல எனக்குத் தெரியாது. ஒங்க பொண் அதிர்ஷ்டம் நன்னயிருந்தா கூடைக் கணக்காய் வாரிக்கொட்டரான். அப்படித்தான் எதிராளாத்து அம்மணிக்குக் கலியாணம் ஆனபோது அவாத்துக்காரருக்கு சூச்சக்கரக் குழி கிடையாது. வாசிப்பை நம்பித்தான் கொடுத்தா. இப்பொ பாருங்கோ, மாடும் கன்னும் வீடும் வாசலும்! எனக்கென்ன வேணும்? குசாலா பதினெட்டு வயசுப் பிள்ளையாப் பாத்து பணக்காரன, மன்மதனைப் பாத்துக் கொடுங்கோ. ஐயாயிர ரூபாய் எதிர் ஜாமீன் மூட்டைகட்டி வச்சிண்டிருக்காப் பலெதான் பேச்சு!

ரா — எல்லாருண்டேயும் 5000 மும், 10000 மும் இருந்துட்டா லோகம் போர

வழி எப்படி? ஏதோ உள்ளதைக்கொண்டு மனசுக்குத் திருப்தி பண்ணிக்கொள்ள வேண்டியதுதான்.

ல—அதுக்கென்ன! ஆராவது குப்பக் காட்டிலே ரெண்டுவேலி நெலம் உள்ள பிள்ளேயொண்ணு பாத்துப் பண்ணி விட்டா, ஸபலமாயிடும். ஸதா வெத்திலே யும் பொகையெலேயும் போட்டுக் கொதப் பிண்டு, ரேக்ளாவண்டி, ரங்காட்டம், தேவடியா, இந்தவிளேயாட்டுகளிலே, இருக் கிறதை ஒழிச்சுட்டு, பிள்ளேயும் பெண்ணே யும் பெத்து மூலேமூலேயாக் குமிச்சா அது ஒங்களுக்குப் பாந்தமா யிருக்கும். பொண் ணுக்குக் குடுத்துவச்சிருக்க வேண்டாமா?

[லக்ஷ்மியம்மாள் முகஜாடை யுடைய வளும், அவளுக்கு நாலு வயது சின்னவ ளுமான ஒரு சுமங்கலி கொல்லேக்கட்டுக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வருகிருள். ராமுவையா இருப்பதைப் பார்த்துச் சற்று மெதுவானகுரலில் தன் அக்காளிடம் சொல்லுகிருள்.]

நாராயணி—அரிசி முழுக்க தாத்தி யாச்சு. வேலேக்காரி வீட்டுக்குப் போகண மாம். ஒன்னே கூலி போடக் கூப்படரா.

ல—அந்தக் கூலியை நீ போடப்படா தோ, அதுக்குகூட மோடித்தனமா? ஒங்க காரியம் பாக்கரதா, வீட்டுக்காரியம் பாக் கரதா, நான். ஒனக்குக்கலியாணம் பண்ணி வைச்சது போராதுன்னு ஒம்பொண்ணு க்கு கலியாணம் தேடர உத்தியோக மெனக்கு வந்திருக்கு.

[என்று சுவாதீனமும் சற்று சலிப்பும் தொனிக்கும் குரலில் சொல்லிவிட்டு.]

ஒங்காத்துக் காரரைக் கேட்டாச்சு, ஒன் னபிப்பிராயமென்ன?

நா—(சற்று கடுமையாய்)-எனக்கென்ன அபிப்பிராயம் வச்சிருக்கு?

ல—அம்மா, ஆரம்பிச்சுடாதே சண் டையை. அவா வந்து பாத்துட்டுப் போனுளே, அவாளுக்கு பதில் சொல்ல வேண்டாமான்னு தான் கேட்டேன்.

நா—அந்தப் புள்ளெக்குக் குடுக்கரதைப் பாக்க எங்கேயாவது குழிலெ தள்ளலாம். முப்பத்தஞ்சு வயசு இருக்கும்போலே ருக்கு. வழுக்கத்தலேயும், 'மணிபாக்ஸ்' மாதிரி வாயும், கொட்டப் பானெக் கரி கூட சேத்துக்கலாம் போலேருக்கு.

ல—என்னடீ ரொம்ப ரொம்ப வர்ணிக் கரயே, ஒம்பொண் என்ன ரம்பையோ? வெருவாய்க் கலேகெட்டதுகளுக் கெல்லாம் ராங்கிதான்.

நா—

[ஆத்திரமும் துக்கமும்கலகலவென்று கண்ணில் ஜலம் வர]

ஆமாம்! என்னேப்போல ஏழைகளுக்குப் பிள்ளே குட்டி பிறக்கப்படாது.

[எதிர்த்தவீட்டு வக்கீல் ராமச்சந்திரய் யர் ஸம்ஸாரம் உள்ளே வருவதைக் கண் டதும் ராமுவையர் எழுந்து வாசலில் போய் விடுகிருர்.]

ல—வா, அம்மணி.

அ—என்ன சேதி—கலியாணம் நிச்சய மாச்சா?

ல—ஒடமைக்காராளுக்கு அக்கரை யிருந்தாளு ஆகும்.

அ—அது என்ன அப்படிச் சொல் ரேளே அம்மாமி? நீங்க சொன்ன அதை யாரு தடுத்துச் சொல்லப்போரா.

ல—அப்படியில்லேடி, அம்மா, பிள்ளே யார் கோவிலேப் பெருக்கலாம், முழுகலாம், அங்கே சமைச்சுச் சாப்பிடலாமா? கலியா ணம் கார்த்தி, நாள் கிழமென்ன, அப்போ நான் ஒரு மொட்டச்சி இருக்கேனேன்னே செய்யக் கடமைப்பட்டவள். பாவாடை வாங்கரத்துக் கும், சித்தாடை வாங்கரத் துக்கும், பள்ளிக்கூடச் சம்பளம் கொடுக் கரத்துக்கும் நான் வேணும். பாக்கிக்கி நான் ஏதுக்கு?

அ—நாணிநல்ல பொண்ணுச்சே, அப்படி யெல்லாம் விகல்பமாய் இருக்கமாட்டாளே.

ல—பொண்ணே கண் ணே ன் னு சொல்ரதில்லேயா அம்மா, அவ பொண் அருமை அவளுக்குன்ன தெரியும்? நான் படுகுழியிலே தள்ளப் பார்க்கரேனும். இளேயாளாய் கிழவன் கழுத்திலே கட்டப் பார்க்கிரேனும்.

அ—ஏதுடீ, நாணீ, அப்படிச் சொல்லு வாளோ? அந்தப் பிள்ளேக்கென்ன ராஜா வாட்டமா. எங்காத்திலேகூட சொல்லிண் டிருந்தது, "வக்கீல் ராஜாராமய்யர் மருமா னுமே, நல்ல குலம் கோத்திரம். பய்யன் கண்ணுக்கு சுமாராயிருக்கான். அதனுலே யென்ன? ஆண் சிங்கம் ஆண்சிங்கம் தானே"ன்னு. மூத்தாளேஏதோ படுத்தின தாகச் சொன்னுளேன்னு கேட்டேன். "அதெல்லாம் வீண் வம்பு. அதுக்கென்ன? இந்தக் காலத்துப் பொண்கள்ளாம் ராக்ஷஸியாயிருக்கு. ஆம்படையான் ஓரி

யாப் பிறந்தாத் தேவலேயின்னிருக்கு. அந்தப் பய்யனுக்கு வாழா வெட்டியாம் ஒரு தங்கை ஆத்தோடு இருக்கா. அதி லிருந்து புகார் கிளம்பியிருக்கும்'' இன் ஞுப்பிலேயிருக்கு.

நா—குறைச்சலில்லே. சோத்துக்கு வழி யைக் காணும், லக்ஷணம் கேக்க வேண்டியதில்லே. இதிலே நாத்தனூர் கொடுமை வேறயா ?

அ—அப்படியெல்லாம் கடைச்சல் பிடிச் சால் ஆகிறதா ?

நா—போருமடி, அம்மா. எல்லாரும் பொரத்தையாருக்கு வாத்தியார்தான். ஏன், ஓங்க ருக்குமணிக்கி இந்த சிலாக் கியமான வரனைப் பார்க்கறதானே ?

அ—[வெகு கோபத்துடன் சட்டென்று எழுந்து]

நான் போயிட்டு வரேன் அம்மாமி, ரெண்டுங்கட்டான்களோடே வாய்க்குடுத் தால் இப்படித்தான்.

[நாராயணியை விழுங்கி விடுவாள் போலக் கடிந்து பார்த்துக்கொண்டு]

எங்க ருக்மணிக்கி கலியாணம் பண்ண னும்னு பொரத்தையார் கையைப் பாத்து நாங்க நிக்கல்லே

[என்று சொல்லிக்கொண்டே வெளி யில் போய்விடுகிருள்.]

நா—(அழுதுகொண்டு) ஆமாம், எங் தலைவிதி பொரத்தையார் காலுங் கிழே வந்து நிற்கத்தான் வேண்டி யிருக்கு. அவங்களுக்கு வாக்கப்பட்டால் வேற என்ன கெதி ?

ல—இந்தாடி, ஒன் நீலித்தனமெல்லாம் இங்கே வாண்டாம். வெள்ளிக்கிழமையும் அதுவுமாய் கலியாணப் பேச்சை யெடுத் தாக் கண்ணீர் விடரயே, மூதேவி! இப்போஒன்பெண்ணுக்குக்கலியாணத்தை தான் பண்ணு. சும்மாயிரு. ஒன் பாடு ஒன் ஆம்படையான்பாடு-ஆனல் ஒண்ணு சொல்ரேன். இந்த வரனைத் தட்டிப்பிட்டு இங்கே யிருக்கப்படாது. இன்னிக்கு ருத் திரியே ஓம் பொண் பிள்ளே எல்லாத் தையும் அழைச்சுண்டு நடந்துடணும். எல்லாம் எனக்கு சாதிச்சது போறும். காசாலேயும், பணத்தாலேயும் தேகத்தாலே யும் ஒழச்சதுக்குக் கண்ட பலன் போறும். என்னே அலக்ஷியம் பண் ணிட்டு, பொரத்தையார் பாத்துச் சிரிக்க, என்னுத்திலே என்ன வேலே ?

[என்று சொல்லிக்கொண்டே ஆவே சம வந்தவள்போல ஆர்பாட்டம் பண் ணிக்கொண்டு கொல்லேயில் போகிருள். ராமுவய்யர் உள்ளே வருகிருர்.]

நா—சொன்னத்தை யெல்லாம் கேட் டுண்டிருந்தீரா ?

ரா—எல்லாம் கேட்டுண்டுதான் இருந் தேன்.

நா—சரி, வீராச்சாமியை வண்டியைக் கட்டச்சொல்லும், (வாசலில் வண்டிச் சத்தம் கேட்கிறது) அது யாருது, நம்ம மாட்டுமணிச் சத்தம் மாதிரி யிருக்கே ?

ரா—ஆமாம், நம்ம வண்டிதான்.

நா—எதுக்காகப் பூட்டியிருக்கு?

ரா—ரயிலுக்குப் போறத்துக்கு.

நா—என்ன, கலியாணம் நிச்சயம்பண் ணப்போறத்துக்கா? (ராமுவய்யர் மௌன மாயிருக்கிருர்)-இடிச்ச புளியாட்டமா வாய் தரக்கல்லேயே! இப்படி இப்படி இருந்து தான் இந்த கெதியாச்சு. புள்ளே வாசித்து கலெக்டர் பண்ணுமப்போனுப் போகட் டும். கொழந்தைகளே அழச்சுண்டு ஊருக் குப்போவோம். நம்மெப்போல ஏழை எத் தனேயோபேரில்லேயோ, அவாளேப்போல இருந்துட்டுப் போரோம். எல்லாருக்கும் பணக்கார அக்காளா இருக்கா!

ரா—படபடக்காதே! கையிலிருந்து கிழேவிழுந்தால் எடுக்கலாம். வாயிலிருந்து விழுந்தால் எடுக்கமுடியாது. எல்லோரும் இவ்வளவு நிர்பந்தமாகச் சொல்லும் போது இந்த வரனே எப்படி தட்டரது ?

நா—எல்லாரும் யாரு?

ரா—ஓங்க அக்காளேத்தான் சொல் லேன் ஒனக்கெவ்வளவோ பண்ணிருக்கா. கொழந்தைகளேக் கொண்டுவந்துவச்சுண்டு எவ்வளவோ பாடுபட்டிருக்கா...

நா—அதுக்காக? என்தானந்தரமான கொழந்தையைப் படுகுழியில் தள்ரதா? அவள் இளேயாளாய் வாக்கப்பட்டான்னு அதுக்காக ஊரிலே எல்லாரும் அப்படியே வாக்கப்படணம்முனுநினேக்கிறதா? பொண் ணுக்கும் புள்ளேக்கும் சாதிச்சுட்டேன் எங்கிராளே, என்னத்தை சாதிச்சுட்டா? மாசம் ஒரு தடவை ஒருவண்டி சாமான்- நெல்லாத்தானே, புளியாத்தானே; நெய் யாத்தானே,பாலாத்தானே-கொண்டுவந்து போட்டுண்டு, அவாத்திலே ஜலம்தெளிச்சு கோலம்போட்டுட்டா பத்து ஆசாமி வேலே

செஞ்சுண்டு, சின்னக் காரியம் பெரிய காரியம் எல்லாத்துக்கும் தலையிலே அக்ஷதை போட்டுண்டு ஆறுமாஸத்துக் குழந்தையோடே ஆத்துக்காரர் விட்டுப்போன அவளைக் கட்டிக் காவல் காத்தோமே! அதுக்கு, இந்த வாய்க்கு வாய் இடிச்சுக் காட்டராளே. ஏதோ இந்த ரெண்டு கொழந்தைகளுக்கு ஒரு வயறு சோறு போடரதை இதுதான் கண்டபலன். இவாளுக்கு அள்ளுக்கட்டரதை நாம் செலவு பண்ணிக்கொண்டு இங்கே ஒரு தனி ஜாகை வெச்சுக்கொண்டால் எவ்வளவோ சௌக்கியமாயிருக்கலாம்.

ரா—அதெல்லாம் எனக்குத் தெரியாததுமில்லே; உன்னாட்டமா எனக்குப் பேசத் தெரியாததுமில்லே. அவள் சின்னப் புத்தியைக் காட்டினுல் நாமும் சின்னப் புத்தியைக் காட்றதா? இவ்வளவு நாள் ஒத்துப் பழகிவிட்டு ஒரு ஊரில் அவள் ஒரு தெருவிலும் நாம் ஒரு தெருவிலும் இருந்தால் அழகாயிருக்குமா? அவளுக்குத்தான் வேறு யாரிருக்கா?

நா—அதுக்காக அவள் சொல்றதெல்லாம் கேழ்க்க முடியுமா? மத்தியானம் அவாள் வந்துட்டுப் போனதிலிருந்து குழந்தை அலமேலுவுக்கு மூஞ்சியில் ஈ ஆடலை. என்னைப் பார்க்கிருள் கண்ணில் ஜலம் தளும்புறது. உடனே அப்புறம் திரும்பிக் கொள்ருள். வீடுகூட்டி கருப்பாயிக்கிக்கூடப் பிடிக்கவில்லே. 'அய்யோ, அம்மா, ஆத்திலே கொளத்திலே தள்ளராப்பலெ தங்கமான கொழந்தையைஅந்தச் கொண்ட மொஸருக்குக் குடுக்காதீங்க'ன்னுள்.

ரா—சரி, சரி, கருப்பாயி புத்திமதி அப்புறம் இருக்கட்டும். ரயிலுக்கு நாழியாச்சு. ஆனிமாசக் கடைசியாகப் போறது. இந்த வருஷம் தட்டினுல் அப்புறம் நம்ப ஊரில் தலையைக் காட்டறதற்கு இடமில்லே. நானும் மூணு வருஷமாய் அலையாத இடம் பாக்கியில்லே. ஒனக்கு தெரிஞ்சது தானே. நாமென்ன பண்ணலாம். விதி எப்படியோ அப்படித்தானே ஆகும். ஒரு ஜோஸியர் பாக்கியில்லாமல் இளையாளாகத் தான் நம்ம குட்டிக்குக் கலியாணம் ஆகும் என்கிருர்கள். ஆனுல் நல்ல ஜாதகம். பூருகிற இடம் ரொம்ப செழிக்குமுன்னு சொல்லியிருக்காளே, அது பலிக்கட்டுமே. என்ன சொல்றே?

நா—(மறுபடி கண்ணீர் உகுத்துக் கொண்டு)—நான் என்ன சொல்றது? அது பண்ணின பாக்கியம் அவ்வளவுதானுக்கும்! இந்தப் பாழும் பொண்கட்டைகளை பகவான் சிருஷ்டிக்கவே வாண்டாம், இப்படி லோலாயப்படறதுக்கு. எங்கொழந்தைக்கும் 2000, 3000 கொடுத்துக் கலியாணம் பண்ண வக்கிருந்தால் சொத்து சொதந்தரமும் லக்ஷணமு ள மாப்பிளே தேடலாம். எதையோ பண்ணுங்கோ, எனக்கிம்மே நல்ல உசிர் வரப்போரதில்லே

[என்று சொல்லி விம்மிக்கொண்டே அடுத்த காமரா உள்ளுக்குள் செல்கிருள். ராமுவய்யர் தன் கண்களில் மூட்டின நீரை விரலால் சுண்டியெரிந்து மூக்கை சிந்திவிட்டு ஒரு கித்தானில் மடிவேஷ்டியை எடுத்து வைத்துக் கொண்டிருக்கிருர். கொல்லேக்கதவு திறக்கப்படுகிறது லக்ஷ்மியம்மாள் உள்ளே வருகிருள்.]

ல—என்ன முடிவாச்சு?

ரா—முடிவா?


[அரை நிமிஷம் யோசிப்பவர் போல் தயங்கி]

நீங்கள்தான் முடிவுபண்ணி விட்டேளே?

ல—(ஒருபக்கம் சிரிப்பும், ஒருபக்கம் கர்வமும் முகத்தில் நடமாட)—என்ன நீங்களும் ஆம்படையாள் கக்ஷியிலேதான் இருக்காப்பலேருக்கு! என் பேரிலே கோவிச்சுக்காதேயுங்கோ. நான் கட்டாயம் கிட்டாயம் படுத்தல்லே. நாளைக்கு, 'அந்தப் பாவி எங் கொழந்தையைக் கெடுத்துட்டாள்' என்றெல்லாம் என் மண்டை உருள வேண்டாம். ஓங்க பாடு ஓங்க ஸம்ஸாரம் பாடு.

[இதற்கெல்லாம் ஒன்றுமே பதில் சொல்லாமல் மூட்டையைக் கட்டி எடுத்துக் கொண்டு 'போய்வரேனென்று லக்ஷிமியம்மாள் முகத்தைப் பார்க்காமலே சொல்லிவிட்டு வாசலில் போய் வண்டியில் ஏருகிருர், வண்டிக்காரன் மாட்டைத் தட்டி ஓட்டுகிருன். காமரா உள் ஜன்னலண்டை நின்று எட்டிப் பார்த்துக்கொண்டிருக்கும் அலமேலு இதைப் பார்த்தும் உள்பக்கம் திரும்பிக்கொண்டு "அய்யோ, அம்மா. அப்பா ரயிலுக்குப் போராப்பிலேருக்கே!" என்று அழுங் குரலில் சொல்லும் வார்த்தை கேட்கிறது. வண்டியின் ஓசையால் அது ஒருவேளை ராமுவய்யர் காதில் விழாமல் இருந்திருக்கலாம்.]

திரை.




## பூர்வ கதை

கண்டிராக்டர் லம்போதர முதலியார் கொழுத்த பணக்காரர். அவருக்கு அடுத்த வீட்டில் பாப்பாத்தியம்மாள் குடியிருந்தாள். சிறு வயதிலேயே பாப்பாவை லம்போதர முதலியாருக்குக் கல்யாணம் செய்து கொடுப்ப தாய் இருந்தது. ஆனால் பாப்பாவின் தாயார் மறுத்துவிட்டாள். அவள் துரதிருஷ்டம் எங்கே போயிற்று? கடைசியில் பாப்பா ஒரு குடிகார ஜகீர்தாருக்கு வாழ்க்கைப்பட்டு விதவையானாள். பாப்பாவுக்கு ஒரு பெரிய புதல்வனும் இரண்டு சிறு குழந்தைகளும் உண்டு. சிவக்கொழுந்து என்பவன் மூத்த சற்புத்திரன்! அவன் போகாத சினிமாக் கொட்டகை பாக்கியில்லை; குதிரைப் பந்தயமில்லை. இதனால் பாப்பா மனம் புழுங்கினாள்.

முதலியார் மனம் வைத்தால் பாப்பாவின் கஷ்டங்களுக்கு விமோசனம் உண்டாகும். ஆனால் பாப்பாவுக்கு சிறு உதவிகள் செய்யக் கூட பயப்பட்டார் முதலியார். ஊரில் ஏதாவது புரளி ஏற்பட்டு ஏதாவது புனிதத்தின் கௌரவதிற்கு களங்கம் உண்டானால் என்ன செய்வது என்று அஞ்சினார். முதலியாரும் அவர் தாயார் தேவனையம்மாளும், மருமகள் புனிதவதியும் பாப்பாவின் நிலைமையைக் கண்டு பரிதாபப்பட்டார்கள்.

புனிதவதியின் தாயாரும் பாப்பாவும் ஒரே வயதியள். இணை பிரியாமல் இருந்தவர்கள். தாயும் தந்தையும் இறந்துபோய் விட்டதால் எல்லோரும் புனிதத்திடம் அன்பாயிருந்தார்கள். பாப்பாவுக்கு புனிதத்திடம் உயிர். அதுபோலவே புனிதமும் பாப்பாவிடம் ரொம்ப வாத்ஸல்யமா யிருந்தாள்.

முதலியார் குமாரன் தணிகைவேலனுக்கும் புனிதவதிக்கும் ஒரே வயது. இருவரும் காலேஜில் படித்து வந்தார்கள். எப்போதும் ஒன்றாகவே இருப்பார்கள். புனிதம் தணிகை வேலனைக் காதலித்தாள். ஆனால் அவன் மனோ நிலையை அவள் தெரிந்துகொள்வது எப்படி? புனிதம் ஒரு நாள் இன்பக் கனவு கண்டு விழித்துக் கொண்டாள். தணிகை வேலனுக்கும் தனக்கும் கலியாணம் ஆகி விட்டதாகவும், யாழ்ப்பாணம் போய் சுகமாய் காலங் கழிப்பதாகவும் கனவு கண்டு விழித்துக் கொண்டு இன்பமடைந்தாள். அன்றிரவு அவளுக்குத் தூக்கமே வரவில்லை. மறு நாளும் இதே நினைப்புத்தான்.

(இனிமேல் படிக்கலாம்)

3

## பெண் உள்ளம்

அன்று வெள்ளிக்கிழமை. காலை சுமார் எட்டுமணி இருக்கும். புனிதம் எண்ணெய் தேய்த்துக்கொண்டு குளித்துவிட்டு, தோட்டத்தில் சண்பக மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு ஈரக் கூந்தலைக் கோதி ஆற்றிக் கொண்டிருந்தாள்.

காலைவேளையாதலால் பட்சிகளெல்லாம் தோட்டத்தில் ஒரே கூச்சல்போட்டு அமர்க்களம் செய்து கொண்டிருந்தன. மரக்கிளைகளின் இடைவெளிகள் வழியாகக் காற்றடித்தபோது, சூரிய வெளிச்சம் பளிச்சென்று பாய்ந்து, புனிதத்தின் கண்களைக் கூசச்செய்யும்; சில சமயங்களில் அவளுடைய கன்னங்களிலும் முகத்திலும் பட்டு அழகைப் பிரதிபலிக்கும். குழற் சுருள்கள் காற்றில் அடிக்கடி அவள் கன்னங்களில் விழுந்து ஊசலாடிக் கொண்டிருந்தன.

தலைமயிரை ஆற்றுவதைத் தவிர மற்றப்படி புனிதம் மெய்ம்மறந்து உட்கார்ந்திருந்தாள். சுற்றி நடந்துகொண்டிருந்த ஒன்றும் அவள் கண்ணிலோ காதிலோ படவே இல்லை. பல நிகழ்ச்சிகள் அவளுடைய மனக்கண் முன்பு ஒன்றின்பின் ஒன்றாகத்

தோன்றி மறைந்துகொண்டிருந்தன. எதையோ நினைத்துத் திடீரென்று புன்னகை கொள்ளுவாள். மறுவினாடி முகம் சிவக்கும். பிறகு மிகுந்த வேதனையுடன் ஆழ்ந்து பெருமூச்செறிவாள்.

அவள் மனதிலிருந்த ஏக்கம் அவளுடைய அங்கங்களில்கூடப் பரவினது போல் இருந்தது. அதில் அவள் கண்ட இன்பக் கனவின் ருசியும் அது கனவுதான் என்ற உணர்ச்சியும் மெல்லிய வேதனையும் கலந்திருந்தன.

யாரோ வேகமாக நடந்துவரும் காலடிச் சத்தத்தைக்கேட்டு தன் கற்பனை உலகத்திலிருந்து கீழே இறங்கினாள் புனிதம். தணிகைவேலன் எதிரே நின்றான்.

தன் நிலைமையைக்கண்டு அவன் ஏதாவது ஊகித்து விடுவானோ என்று சந்தேகப்பட்டாள். சாதாரணமாகப் பேசுபவள் போல "பாட்டி என்னைக் கூப்பிட்டாளா?" என்று கேட்டாள் அவன் முகத்தைக் கண்ணெடுத்துப் பார்த்து.

"இல்லை,—எனக்குத் தெரியாது. நான் இப்பொழுது உள்ளே இருந்து வரவில்லை. நேராக டென்னிஸ் கிளப்பிலிருந்து வருகிறேன். என்னைப் பார்த்தாலே தெரியவில்லையா?" என்று சொல்லிக்கொண்டு அவள் உட்கார்ந்திருந்த பலகைக் கல்லின் மற்றொருபக்கம் தொப்பென்று உட்கார்ந்தான் தணிகைவேலன்.

என்ன பேசுவது, எப்படிப் பேசுவது, என்று யோசிப்பவன்போல் சற்றுநேரம் மௌனமாக யோசித்தான் தணிகைவேலன்.

"என்ன, தணிகு? என்ன சங்கதி? ஏது இன்றைக்கு இவ்வளவு சீக்கிரம் கிளப்பிலிருந்து திரும்பிவிட்டாய்?" என்று ஏதாவது பேச்சுக் கொடுப்பதற்காக புனிதம் ஆரம்பித்தாள்.

தணிகை வேலன் முகம் சற்றே அசடு தட்டிற்று. "இல்லை. ஒன்றுமில்லை. உன்னிடம் தான் ஒரு சங்கதி கேட்கலாமென்று" என்று மேலே சொல்லுவதற்கு வெட்கப்பட்டவன்போல இருந்தான்.

புனிதத்திற்கு உடல் புளகித்தது. உணர்ச்சி மிகுதியினால் அவள் இருதயம் தடதட வென்று அடித்துக்கொள்ள ஆரம்பித்தது.

"என்னிடமா? நிஜம்மா?" என்று குழந்தை கொஞ்சுவதுபோல குதலை மொழியிற் கேட்டாள் புனிதம். அவள் குரலில் ஆனந்தமும், ஆவலும் ஒருங்கே கலந்திருந்தன.

"ஆம், நிஜம்தான். உன்னைத்தான் அபிப்பிராயம் கேட்கிறேன்" என்று அவன் ஏதோவொரு தீர்மானத்திற்கு வந்தவன் போலக் கேட்டான்.

"என்ன தணிகு! அபிப்பிராயமா? எனக்கென்ன சொல்லத் தெரியும்? நான் ஏதாவது உளறி வைப்பேன். அது சரியாயிருந்தாலு மிருக்கலாம். பைத்தியக் காரத்தனமா யிருந்தாலு மிருக்கும். தவிற, பெரியவர்களை சிறியவர் கேட்பதுண்டு. என்னைக் கேட்டால்?"

"இல்லை, புனிதம்! உன் குணமும் மனப்போக்கும் எனக்குத் தெரியாதா? உனக்குத் தோன்றுகிறதைச் சொல்லேன். கேட்கலாமா கூடாதாவென்று மூன்று நாளாய் யோசித்தேன். நீ பாட்டியுடனேயே இருந்தாய். இன்று தான் தனியே இங்கு உட்கார்ந்திருப்பது தெரிந்தது; வந்தேன். ஏன் உன் கண் சிவந்திருக்கிறது?"

"ஒன்றுமில்லையே, சரி. சங்கதி என்ன சொல்லவில்லையே?"

"புனிதம்! இந்த விஷயத்தில் நீ ஒளிக்காமல் சொல்லவேண்டும். ஆலோசித்துச் சொல்லுவதானாலும் போதுமான சாவகாசம் இருக்கிறது. கேட்டபிறகு "பரிகாசம் செய்யக் கூடாது" என்று மிகவும் தணிந்த குரலில் கூறினான் தணிகைவேலன்.

அவள் இன்பக் கிளர்ச்சிகொண்டு தவிக்கலானாள். ஈசுவர ஸன்னிதானத்திற்குச் செல்லும் பரம பக்தன்போல் அவளது உள்ளம் நெகிழ்ந்தது. சற்றுநேரம் இருவரும் பேசவில்லை. நாணத்தின் ஒரு சிறு அலை அவள் முகத்திற் தோன்றி மறைந்தது. சற்று சமாளித்துக் கொண்டு "சரி தான். இவ்வளவு பீடிகை எதற்கு? சங்கதியைச் சொல்லேன்" என்று மெல்லிய குரலிற் கேட்டாள் புனிதம்.

தணிகைவேலன் தயங்கினான்.

புனிதம் தலையைக்கோதி முடியும் பாவனையாக அவனை ஏறிட்டுப் பார்த்தாள். தணிகு சிரித்தவண்ணம் தலையைக் குனிந்து கொண்டான்.

"புனிதம்! உன்னுடன் படித்தாளே, சிவகாமி, அவளை உனக்குத் தெரியுமா?" என்று அவன் உருக்கத்துடன் அவளைக் கேட்டான்.

திடீரென்று ஒரு சிறு புயல் அவள் மனதுள் எழுந்தது. நெஞ்சு படீர் படீர் என்று அடிக்க ஆரம்பித்தது.

"ஏன், தெரியாமலென்ன? என் வகுப்புத்தானே. திவ்வியமாய்த் தெரியும்" என்ற வார்த்தைகள் மிகுந்த சிரமத்துடன் அவள் வாயினின்றும் எழுந்தன.

தலை குனிந்தவனாய், "அவளை எனக்கு நிச்சயம் செய்து விட்டாராம் அப்பா. அவளைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. உனக்குத் தெரிந்திருக்குமென்று எண்ணுகிறேன். குணம் எப்படி? உள்ள படி சொல்லு" என்று மிகவும் தாழ்மையுடன் கேட்டான் தணிகு.

"அது சரி. உன் எண்ணமென்ன?" என்று மிகுந்த சிரமத்துடன் முகத்தில் முறுவலை வரவழைத்துக்கொண்டு கேட்டாள் புனிதம்.

"எனக்கு இப்பொழுதொன்றும் கலியாணத்திற்கு அவசரமில்லை. வாயைத் திறந்தால் போதும். இந்தக் காலத்துப் பிள்ளைகளே இப்படி, அப்படி என்று ஏதேதோ சொல்ல ஆரம்பித்து விடுகிறார்கள். எனக்கொன்றுமே புரியவில்லை. பாட்டியிடம் சொல்லவும் பயமாயிருக்கிறது. யாரிடம், சொல்வது, என்ன செய்வது, ஒரே குழப்பமாயிருக்கிறது. நீ வயதில் சிறியவளானாலும் என்னைவிட நீ சூட்சுமமாய் எல்லாவற்றையும் புரிந்து கொள்ளுகிறாய். நீயும் இகழ்வாயோ என்று கொஞ்சம் பயந்தேன். வேறு வழியில்லை. அப்பாவோ பிடித்த பிடியை விடமாட்டார். அவள் அழகி என்று மட்டும் எனக்குத் தெரியும். மற்றப்படி குணம், முதலியவைகளை நீதான் சொல்ல வேண்டும்" என்று சொல்லித் தலையைக் குனிந்து கொண்டான் தணிகைவேலன்.

புனிதம் புடவையின் முந்தானையைக் கையில் பிடித்து ஏதோ விஷமம் செய்தவளாய், மிகுந்த சிரமத்துடன் பொங்கி எழும் மனதைத் திடப்படுத்திக்கொண்டிருந்தாள்.

சற்றுநேரம் ஒரே நிசப்தம்.

"புனிதம்! யோசித்துச் சொல்லுவதானாலும் சரி, போதுமான சாவகாசமிருக்கிறது" என்று அவன் தலைகுனிந்த வண்ணம் மிகவும் தணிந்த குரலில் சொன்னான்.

புனிதம் சமாளித்துக்கொண்டாள். "அது சரிதான். அவளைப்பற்றி சொல்வதற்கு—சம வயதியான எனக்கு எப்படித் தெரியும்? இருந்தாலும், நீ விரும்பும் பக்ஷத்தில், நல்லதென்றே எனக்குத் தோன்றுகிறது. அவள் மிகவும் நல்ல பெண்தான், சற்று முன்கோபி. படபடவென்று கோபத்தைக் கொட்டிவிடுவாள். அடுத்த விநாடி பரம சாதுவாகிவிடுவாள். பொதுவாக மற்றப் பெண்களைவிட, பணிவும் அதிகம்தான்,...தவிர கோபிப்பதற்கு இங்கென்ன கிடக்கிறது? அவளே ராணி அவளே மந்திரி" என்று சொல்லுகையில் அவள் குரல் கம்மிப்போயிற்று.

அப்பொழுதும் தணிகு தலை நிமிரவேயில்லை. சற்று நேரம் ஒரு குச்சியினால் கோடிட்டுக் கோடிட்டுக் கலைத்தவனாய், "புனிதம்! நீ உள்ளபடி உன் மனதிலிருந்ததைச் சொன்னதுபற்றி எனக்குச் சந்தோஷம். நீ எங்கே கேலி செய்வாயோ என்று பயந்தேன். நல்லவேளை! இந்த மட்டும் புனிதவதியார் கருணை. நீ என்னதான் சொல்லு, வயதுமட்டும் ஆயிற்றே ஒழிய உன்னைப்போல் சட்டென்று ஒரு பதில் சொல்ல என்னால் முடிகிறதில்லை," என்று நிறுத்தினான் தணிகு.

புனிதத்தின் முகத்தில் ஒரு க்ஷணம் சோகம் கலந்த ஒரு புன்னகை தோன்றி மறைந்தது.

தணிகைவேலன் தலை நிமிர்ந்தான். "அடே! அப்பா, தணிகு! காப்பி சாப்பிட வாடா!" என்று பாட்டியம்மாளின் குரல் கேட்டது. தணிகு எழுந்து நின்றான். "பாட்டி கூப்பிடுகிறாள், போகட்டுமா?" என்றான்.

"ஆகா, போயேன்!" என்று புனிதம் இயந்திரம்போல் பதில் சொன்னாள். அவன் போனதும் தலையிலிருந்த பளுவு தரையில் விழுந்ததுபோல் இருந்தது. அவள் ஒரு நெடுமூச்செறிந்தாள். அவள் நெஞ்சு படீர் படீர் என்று சம்மட்டி கொண்டடிப்பதுபோல் துடிக்கலாயிற்று.

ஒய்யார நடையுடன் சீட்டியடித்துக் கொண்டு கையிலிருந்த "பாட்"டைச் சுற்றிக்கொண்டே அவன் செல்வதைக் கண்ட அவள் சிறிது நகைகொண்டாள். மறு விநாடி அவள் முகம் சிவந்தது.

துயரம் தாளாமல் மார்பு எங்கே வெடித்துவிடுமோ வென்றெண்ணுபவள் போல் இரு கரங்களையும் மார்பில் புதைத்தவளாய்க் கற்சிலைபோல் உட்கார்ந்திருந்தாள். குழந்தைப் பருவமுதல் அதுவரையில் நடந்த ஒவ்வொரு சிறு சம்பவமும் அவள்முன் தோன்றித்தோன்றி மறைந்து கொண்டிருந்தன. இன்னதென்று சொல்ல முடியாத ஒரு விதமான வேதனையினால் அவள் மனம் தவித்தது.

"தணிகு! இவ்வளவு நாள் என்னுடன் நெருங்கிப் பழகியும் என்னை நீ தெரிந்து கொள்ளவில்லை. அட அசடே! என்னைத் தெரிந்து கொள்ளாதது கூட போனால் போகட்டும். சிவகாமி எப்படி என்று என்னையே கேட்க வந்தாயே? நீ கேட்டாலும், கேட்காவிட்டாலும் மாமா தன்னிஷ்டப்படிதான் நடப்பார். அது தெரிந்த சங்கதிதானே. அருகிலேயே இருக்கும் என்னையே நீ புரிந்து கொள்ளவில்லையே! ...உன்னைச் சொல்லுவதில் குற்றமில்லை. நீ இன்னும் தெருவில் கோலியாடும் குழந்தையாய்த் தானிருக்கிறாய். நான் தான் பித்து..." என்று மனங் கலங்கி ஏதோ தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

"அவனைப் பார்க்காமலும், அவனுடன் பேசாமலும் ஒரு நாள், ஒரு நிமிஷம், ஒரு விநாடியாவது இருக்க முடிகிறதில்லை எனக்கு. காதல்-காதல்-என்று கதைப் புஸ்தகத்தில் படிப்பான் அவன். ஆனால் தனக்காகவே தெரியாமல் சொல்லியா தெரியப்போகிறது? மாமாவுக்குத்தான் முறைப் பெண்ணாயிற்றே என்று கூடவா எண்ணமிராது? .... ஒருவேளை ... உயில்.... விஷயமாய் பேசாமலிருக்கிறாரோ? இருந்தாலென்ன? நேரில் கேட்கக்கூடாதா? பாட்டியிடம் சொல்லக்கூடாதா? அவ்வளவு தூரம் போவானேன்? இந்தத் தணிகு ஒரு அணுவளவு புரிந்துகொள்ளக் கூடாதா? சிவகாமியைப் பற்றிக் கேட்டுவிட்டு ஒய்யார நடை நடந்து போகிறானே?...வேடிக்கைக் காகவாவது 'என் புனிதம்! உன்னையே மணந்து கொண்டால்?' என்று கேட்கக் கூடாதா?..."

"அம்மா! புனிதம்! ஏனம்மா தனியாய் உட்கார்ந்திருக்கிறாய்? வெயிலேறி விட்டதே, உள்ளே போயேன்! ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய்? உடம்பு சுகமில்லையா?" என்று கேட்டவராய் மரத்தருகே வந்தார் முதலியார்.

புனிதம் திடுக்கிட்டாள். எங்கே தன் மனதிற் றோன்றியவைகளை வாய்விட்டுச் சொல்லிவிட்டோமோ என்று சந்தேகிப்பவள்போல், அவரை ஏறிட்டுப் பார்த்தாள். (தொடரும்.)

---

## ஆசிரியர் அறிக்கை

முக்கியமாக கிராமப் புனருத்தாரணத்தைப் பற்றியும், பொதுவாக ஸ்தல ஸ்தாபன, ரோட்டு, ரயில் சௌகரியா சௌகரியங்களைப் பற்றியும், நேயர்கள் தங்களுக்குத் தோன்றும் ஆலோசனைகளை நமக்குச் சுருக்கமாக எழுதி அனுப்புமாறு கோருகிறோம். அந்த யோசனை நமது சமூக வாழ்வின் எந்த அம்சத்தைக் குறித்தாகிலும் இருக்கலாம்; தனி நபரைக் குறித்துமட்டும் இருக்கக் கூடாது.

ஆசிரியர்

# பகிரங்கக் கடிதமல்ல

## தீர்க்கதரிசி எச். ஜி. வெல்ஸுக்கு

இலக்கிய ஜோசியரே!

உங்கள் நாட்டில் புத்திசாலிகள் அதிகம். அதிலும், உங்களைப் போன்ற எழுத்தாளர்களிடையே அவர்கள் மலிந்து கிடக்கிறார்கள். ஆனால் பாவம், உங்களுக்கெல்லாம் மிதமிஞ்சிய மூளையைக் கொடுத்துவிட்டான் அந்த பகவான். உலகத்திலேயே அபார மூளை யடைந்தவர்களில் நீங்களும் ஒருவர் என்று பலர் சொல்லுகிறார்கள். ஆனால் அந்த மூளையின் மாகாத்மியம் முழுவதும் போன வாரம்தான் நன்றாய் வெளிப்பட்டது. எத்தனையோ புத்தகங்கள் எழுதி யிருக்கிறீர்கள். சரித்திரம் முழுவதையுமே ஒரு பார்வை பார்த்திருக்கிறீர்கள். வரப்போகும் உலகத்தின் உருவமும் உங்களுக்குத் தெரிந்ததுதான். ஆனால் நீங்கள் எங்களுடைய நாட்டிற்குக் கருணைகூர்ந்து விஜயம் செய்தபோது கொட்டிய அமுத மொழிகளைப்போல் நாங்கள் எங்கும் கேட்டதில்லை. உங்களுடைய மூளை ரகத்தில் சேர்ந்த ஆல்டஸ் ஹக்ஸ்லி என்ற குட்டி ஜோசியர் ஒருவர் தாஜ்மஹாலைப் பற்றியும் காசி நகரத்தைப் பற்றியும் நையாண்டியாக எழுதி வைத்திருக்கிறார். இந்திய தேசியத்தைப்பற்றி அவர் ஒன்றும் சொல்லாமற்போனது, அவருடைய மூளை இன்னும் உங்களுடையதைப்போல் நன்றாய்ப் பழுக்கவில்லையென்பதையே தெரிவிக்கிறது.

"உலக சரித்திரத்தின் சுற்றுக் கோடு" என்று ஒரு புத்தகம் எழுதினீர்கள். பைபிளுக்குப் பதிலாக அதையே முக்கிய புத்தமாக பள்ளிக்கூடங்களில் வைக்கவேண்டுமென்று பெர்னார்டுஷா சொல்லி யிருக்கிறார். சமீபத்தில் சில முஸ்லிம்கள் அந்தப் புத்தகத்தில் சில பகுதிகளை ஆக்ஷேபித்தபோது உங்கள்மேல் அனுதாபம் ஏற்பட்டது. அந்த அனுதாபம் இப்பொழுது ஸ்திரமாகி விட்டது. சரித்திரம் எழுதுவதைவிட உங்கள் அபிப்பிராயத்தை வெளியிடுவதில்தான் உங்களுக்கு அதிக ஆவல் போலும். நீங்கள் என்ன செய்வீர்கள்? சரித்திரம் எழுதியாகி விட்டது. வரப்போகும் விஷயங்களைப் பற்றியும் எழுதிவிட்டீர்கள். இந்த உலகம் போதாதென்று மற்ற கிரகங்களைப் பற்றியும் கோட்டைகள் கட்டினீர்கள். இலக்கியக் கலையுலகில் அவைகள் நன்றாய்த்தான் இருந்தன. உமக்குச் சேரவேண்டிய புகழையும் உலகம் காணிக்கையாகச் செலுத்தியது. அந்தச் சேவையில் இந்திய மாணவர்கள்தான் இன்னும் முன் நிற்கிறார்கள்.

இந்திய மாணவன் உண்மைக்கு உழைப்பான், சத்தியத்திற்குக் கப்பம் செலுத்துவான் என்ற ரகசியத்தை அறிந்த உங்கள் நாட்டுப் பெரிய மனிதர் ஒருவர் அவனுடைய குணாதிசயங்கள் எல்லாம் நன்றாய் விருத்தியாவதற்குத் தாம் ஸ்தாபித்த இயக்க மொன்றைக் கொடுத்தருளினார். சிறிது காலம் வாலிபர்களின் வழிகாட்டியாய் விளங்கினார். பிரபுவானார். ஆனால் பாவம் அவருக்கும் மூளை அதிகம். இல்லாவிட்டால் இப்படிப்பட்ட இயக்கத்தைக் கண்டு பிடித்திருப்பாரா? அந்த மூளைதான் அவருடைய அந்தரங்க உண்மையை வெளிப் படுத்திற்று. ஒருநாள் திடீரென்று ஒரு பிரம்மாண்டமான உண்மையைக் கண்டு பிடித்தார். உடனே அதை வெளியிட்டார். இந்தியர்களுக்கு மானம் கிடையாது என்று அப்பொழுதுதான் மானத்திற்கே தெரியும். அவர் எச்சரிக்கை செய்திரா விட்டால் அந்த "மானம்" தப்பித்தவறி இந்தியாவுக்கே வந்து சேர்ந்திருக்கும். அவர் தான் உங்களுக்குத் தெரியுமே. அவர் எங்கே? கூடிய சீக்கிரம் நீங்களும் அவர்போன விடத்திற்குப் போய் சேருவீர்களென்று நான் நம்புகிறேன். அவரைப் பார்த்தால் நான் விசாரித்ததாக சொல்லுங்கள்.

உண்மையில் அவருக்கு நீங்கள் நன்றி செலுதத வேண்டும். அவருடைய கூற்று உண்மை என்று உங்களுக்குத் தெரிந்திரா விட்டால் நீங்கள் போனவாரம் வெளியிட்ட உண்மையைக் கண்டு பிடித்திருக்க முடியாது.

இந்தியர்களுக்கு மானம் கிடையாது. அப்படி யிருக்கும்போது அவர்களுடைய தேசிய இயக்கம் எப்படி உண்மையா யிருக்க முடியும்? நீங்கள் சொல்லியது போல போலி தானே! அதுவும் கேவலம் மேல்நாட்டு தேசியத்தின் போலி. நன் ருய்ச் சொன்னீர்கள். சரித்திரம் எழுதின வரல்லவா என்ன விருந்தாலும்! நீங்கள் ஆஸ்திரேலியாவிலிருந்து வரும் போது, ஒரு வேளை ஜப்பான் வழியாக வந்தீர் களோ! மேல்நாட்டுப் போலிகளை அந்த தேசம் தானே சிருஷ்டிக்கிறது. உங்க ளுடைய இயக்கத்தைப் போன்ற செல்லு லாய்ட் இயக்கத்தை அவர்கள் தயாரித்து சப்ளை செய்ததாக உங்களுக்குச் சொன் ஞர்களோ!

உங்களுடைய நாட்டையும், நாகரிகத் தையும்பற்றி இதிலிருந்து பல உண்மை கள் வெளிப் பட்டிருக்கின்றன. அஹிம் சையும், சத்தியமும் உண்மையில் உங்கள் நாட்டில் பிறந்ததென்று எங்களுக்குத் தெரியாமல் போய் விட்டதே! என்ன அறி யாமை! உங்களுடைய உலக சரித்திரத்தை இன்னுமொருதரம் படிக்க வேண்டும்.

அஹிம்சை எங்கள் நாட்டின் விசேஷம் என்று நினைத்துக் கொண்டிருந்தோம். அது புதிதாக மகாத்மா காந்தியினுல் கண்டு பிடிக்கப்படா விட்டாலும் அதன் அஸ்திவாரம் 2300 வருஷங்களுக்கு முன் புத்தரால் நிறுவப்பட்டது என்றும் நினைத் துக் கொண்டிருந்தோம். அதுகூடப் போலி என்று இன்றுதான் தெரிகிறது.

புத்தர் காலத்தில் உங்களுடைய தேசத் தில் காடுகளில் திரிந்து கொண்டு ஒருவர் மண்டையை மற்றவர் பிளந்து கொண்டி ருந்தார்களே, அப்பொழுது ஜீவகாருண் யம் அங்கிருந்து புத்தரால் இறக்குமதி செய்யப் பட்டிருக்க வேண்டும்—ஜப்பான் மூலமாக.

எங்கள் தேசத்தில் அசோகன் என்று ஒரு ராஜா இருந்தான். அவனைப்பற்றி நீங்கள்கூட உங்கள் புத்தகத்தில் குறிப் பிட்டிருப்பதாகக் கேள்வி. அந்த அரசன் ஒரு சமயம் இனி யுத்தம் செய்வதில்லை யென்று தீர்மானித்தானும். அது அவ னுடைய சொந்த யோசனையென்று நினைத் துக் கொண்டிருந்தோம். அது தவறு என்று இப்பொழுது தெரிகிறது.

உங்களுடைய தேசத்து சமாதான வீர ராகிய சேம்பர்லேனின் மூதாதை ஒருவ ரிடமிருந்து தான் அசோகன் அந்த யோசனையைக் காபி யடித்திருக்க வேண்டு மென்று இப்பொழுது ஊர்ஜிதமாகிறது. காந்திஜியும் ஜவஹர்லால் நேருவும் யாரு டைய காப்பி என்று நீங்கள் விளக்கி யிருந்தால் சௌகரியமா யிருந்திருக்கும். எங்களுக்கு இதெல்லாம் தெரிகிறதா? என்ன விருந்தாலும் மூளையில் வித்தியா சம் எவ்வளவு இருக்கிறது? நாங்கள் இந்த தேசத்திலேயே இருந்திருக்கிருேம். பழக் கமாய் விட்டது. பாவம் நீங்கள் இவ்வ ளவு அபார மூளையுடன் வெயிற்கால ஆரம்பத்தில் உஷ்ண தேசத்திற்கு வந்தீர் கள். அதுவும் ஈக்வேட்டரைத் தாண்டி வரவும் நேர்ந்து விட்டது.

எங்கள்மீது அவ்வளவு கருணைகொண்டு நீங்கள் தேசிய இயக்கத்தைப்பற்றி அபிப் பிராயம் வெளியிட்டது ஒருபுற மிருக்கட் டும். ராஷ்ட்ரபதி தேர்தலைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? இப்பொழுதிருக்கும் நிலை மையில் உங்களுடைய அபிப்பிராயம் ஒன்றுதான் தேவை—மீதி.

சர்வாதிகாரிகளைப் பற்றிய புத்தகம் முடிந்தவுடன் "இந்திய தேசிய இயக்கம்" (ஜப்பானில் செய்யப்பட்டது) என்று ஒரு நூல் எழுதப் போகிறீர்கள் என்பது உண் மைதானு? அதை யாருக்கு சமர்ப்பிக்கப் போகிறீர்கள்? பேடன் பவலுக்கா? மிஸ் மேயோவுக்கா?

இப்படிக்கு,
வாயாடி.


# பத்து ரூபாய்

(ஸ்ரீ. ஆர். பங்காருஸ்வாமி)

"உங்களுக்கென்ன குபேர சம்பத்து? யார் என்ன கேட்டாலும் தாராளமாய் கொடுத்து விடுவீர்கள்...அதிருக்கட்டும். இந்த பூமண்டலத்தில் உங்களுக்கு ஒரு பத்து ரூபாய் கடன்வேண்டுமென்றால் தரு வதற்கு யாராவது ஒருவர் இருக்கிறாரா? எங்கே விரலை மடக்குங்கள்.......ம்ம்ம். பத்துரூபாய்; சுளையாய் ஒரு நோட்டு. எவ்வளவு செய்யலாம்...மூன்று வருஷமாய் எனக்கு ஒரு பாண்டிச்சேரி ஸில்க் வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறேன். அந்தப் பத்துரூபாய் இருந்தால் வாங்கிக் கொள்ளலாம். ஆனால் உங்களுக்கு நான் எது உடுத்தினால் என்ன, உடுத்தாட்டால் என்ன? நானும் குழந்தைகளும் எக்கேடு கெட்டுப்போகிறோம். தங்களை எல்லோரும் தர்மப் பிரபு என்று சொன்னாலேபோறும்!

"ஒரு மாசமாய் குழந்தைகள் சட்டை வேண்டுமென்று முறையிடுகிறார்கள். அந்த நோட்டிருந்தால் சட்டை மட்டுமா, பாவாடை, தாவணி எல்லாம் வாங்கி விடலாம்......நேற்று வீட்டுத்தீர்வை வேண்டுமென்று கேட்டான். போக்கத்துப்போனவர்களுக்கெல்லாம் பத்து பத்து ரூபாய் நோட்டாக கொடுத்துக் கொண்டிருந்தால் வீட்டுத் தீர்வைமட்டுமா, நிலத் தீர்வை, தொழில் தீர்வை எல்லாம் செலுத்திவிடலாமே!......படுக்கை அறை ஜன்னலுக்குக் கதவு போடவேண்டும். அதற்கு இருந்த ஒரு பத்து ரூபாய் நோட்டை துலைத்தெடுத்து நாத்தனாருக்குக் கொடுத்தாய் விட்டதே...ஜன்னல் வழியாய் குளிர் அலையே தூக்கிக்கொண்டு போகிறது. கண்ணுவுக்கோ ஜுரம். ஆனால் உங்களுக்கு கண்ணு இருந்தால் என்ன, இறந்தால் என்ன? எப்படியானும் நாத்தனாருக்கு மனது கோணாமல் அனுப்பியாச்சோ இல்லையோ. அதுவே போறும்......வருகிற செவ்வாய் இன்ஷூரன்ஸ் பணம் கட்டவேண்டும். பணத்தை வாரி இறைக்கப்பட்டவர்களுக்கு இன்ஷூரன்ஸ் ஒரு கேடா?......சரோஜா பிறந்த பிறகு அம்மாவாத்துக்குப் போகவே யில்லை. கையிலே பத்து ரூபாய் இருக்கு, போவோம் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். பெரிய லோகத்துக்கு வேண்டுமென்றால் பயணம் போகலாம். ஒருவரும் தடுக்கப்போவதில்லை...வீட்டில் மூட்டைப் பூச்சிகடி பொறுக்கமுடியவில்லை. வெள்ளையடிக்கச் சொல்லவேண்டுமென்று நினைத்தேன். பசுமாட்டுக்கு பருத்திவிதை கிடையாது. உப்புப் பானையிலே உப்பில்லை. புளிப் பானையிலே புளி கிடையாது. விடிந்தால் ஜம்னு காப்பி எங்கே, தோசை எங்கே என்று அதிகாரம் தூள் பறக்கும். பத்து ரூபாய் இருக்கு, கொஞ்சம் கொஞ்சம் சாமான்கள் வாங்கச் சொல்லுவம்னு பார்த்தேன். எங்கே ரூபாய் இருக்கு, யாருக்கு தூக்கிக் கொடுப்போம் என்று கவலையுள்ளவர்களுக்கு இந்தக் கவலைகள் எதற்கு...... ஐயோ! சப்தம் கேட்கிறதா? எலி பண்ணுகிற ரூடி. ஒரு எலிப் பொறி வாங்கச் சொல்லணம்னு நினைத்தேன். ரூபாய் தான் அபேஸ் ஆய்விட்டதே......கொல்லைக் கதவுக்குத் தாப்பாள் கிடையாது. கள்ளன் வந்து இருக்கிற ஓட்டை உடைசலை அடித்துக்கொண்டு போய்விட்டால் ஒரு முழுக்கு முழுகிவிட்டு சிவனே என்று இருந்துவிடலாம்......"

"ஒரு பத்து ரூபாய் நோட்டுக்கு—பாண்டிச்சேரி ஸில்க், பாவாடை, சட்டை, தாவணி, வெள்ளையடிப்பு, தீர்வை, இன்ஷூரன்ஸ், உப்பு, புளி, பருத்தி விதை, எலிப்பொறி, தாப்பாள் கதவு...அடே அப்பா! எவ்வளவு? உலகத்தையே விலைக்குவாங்கிவிடுவாள்!"




# பார்வதி

பர்வத ராஜனான ஹிமவானுக்கு மக்கட்பேறில்லாத குறை பெருங்குறையாக இருந்தது. அவனுடைய ராணி மேனை என்னென்னமோ விரதங்களும் பூஜைகளும் செய்தாள். கடைசியாக பார்வதி என்ற பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

ஹிமயமலைச் சாரலில் ஒவ்வொரு வருஷமும் வசந்த காலம் வந்து பார்வதிக்கு ஆண்டு நிறைவு நடத்தும். பூவும் பழமும் வாரியிறைத்துப் பட்சிகளைப் பாடச் சொல்லும். எங்கே பார்த்தாலும் பச்சைப் புல்லை விரித்து பவழக்கோலம் போடும். அந்த வசந்த மாதவ உத்சவத்தின் நடுவில் பார்வதி ஆபரணத்தின் நடுவிலிருக்கும் வைரம் போல ஜொலித்தாள்.

பதினைந்து நாட்களுக்கொரு தரம் பூரணசந்திரன் வந்து நிலவைப்பொழிந்து அவளை அதில் நடக்க விடுவான். அந்த இன்ப ஜ்வாலையில் அவள் அங்கங்கள் மேனி கொள்ளும். நட்சத்திரங்கள் அவள் தலை மயிரில் பூக்கள் போலப் பொலியும். இரவுகளில் சந்தன மரங்கள் அவளுக்காக வாசனைக் காற்று விசிறும். மேகங்களிலிருந்து மின்னலை எடுத்து அவளுக்கு ஆபரணங்கள் செய்து போட்டிருந்தார்கள்.

பர்வத குமாரிக்கு இந்தத் தித்திப்பு பிடிக்கவில்லை. அதன் அதி அவளுக்குத் திகட்டலாக இருந்தது. அந்த இன்பச் சாரலைவிட்டு நீங்கி பர்வத சிகரத்தின் பனித் தனிமைக்குப் போனாள்.

அங்கு ஒன்றுமே இல்லை. எங்கு பார்த்தாலும் பர்வதமும் பனியும் தான். அதன் நடுவில் சிவன் தவம்செய்த வண்ணம் உட்கார்ந்திருந்ததைக் கண்டாள். அவர் தலையின் ஜடைகளிலிருந்து கங்கை சிறு நீர்வீழ்ச்சிகளாகப் பெருகிக் கொண்டிருந்தாள். அவர் தலையில் பிறை பதிந்திருந்தது. அவர் கண்களை மூடிக்கொண்டு சேதனையற்றதுபோல இருந்தார்.

பார்வதி அந்தக் காட்சியைக் கண்டு காதல் கொண்டாள். அங்கேயே வசித்து அதிலேயே ஈடுபட வேண்டுமென்று தீர்மானித்தாள். தானும் தவத்தில் இறங்கினாள்.

மறுபடியும் வசந்த காலம் வந்தது. எங்கும் வர்ணமும் வாசனையும் நாதமும் நிறைந்தது. பனி கூடப் பிரிந்து காற்றில் தென்றலின் இன்ப ஸ்பர்சம் தோன்றிற்று. சிவனுக்குப் பணி செய்து வந்த பார்வதி அவருக்கு வசந்த மாதவவனத்திலிருந்து கனிகள் கொண்டு வந்து கொடுத்தாள்.

மாசி மாதத்து ஐந்தாம் பிறையன்று பார்வதி மாகபூர்ணிமா விரதத்தை ஆரம்பித்தாள். அது பத்து நாள் விரதம். பிரதி தினமும் சுத்தமான தனது ஜோதி உடலிலிருந்து ஜ்வாலை வீச பார்வதி சிவார்ச்சனையில் மெய்ம்மறந்து ஈடுபட்டாள்:

பௌர்ணமியன்று இரவு நிலவு பட்டபகல் போலக் காய்ந்து கொண்டிருந்தது. பார்வதி அந்த நிலவிலிருந்தே உதித்த ஒளி உருவம்போல சிவ சன்னிதியில் விரத கன்னிகையாக நின்றுகொண்டிருந்தாள். அவள் உடுத்திருந்த மரவுரியின் இடை வெளிகளிலிருந்து அவள் அங்கங்கள் விரகுகளின் இடைவெளிகளில் நெருப்புத் துண்டுகள் போலப் பிரகாசித்தன.

சிவன் கண் திறந்து அவளைப் பார்த்தார். அவரையே அறியாமல் ஒரு நிமிஷம் அவருடைய உதடுகளில் ஒரு புன்னகை தென்பட்டது — இடிக்குமுன் தென்படும் மின்னல்போல. அவர் மனது பார்வதியின் உருவத்தில் ஈடுபட்டுச் சஞ்சலித்தது.

மறு நிமிஷம் அவருடைய கண்கள் சிவந்தன. சுற்றுமுற்றும் பார்த்தார். சிறிது தூரத்தில் மன்மதன் கரும்பு வில்லைக் கையிலேந்தி மலர் அம்புகளை அதில் தொடுத்து விட்டுக்கொண்டு நின்றான். அவன் தன் வெற்றியின் இறுமாப்பில் சிவனுடைய கோபத்தைக் கவனிக்கவில்லை.

சிவன் மூன்றாவது கண்ணைத் திறந்தார். அதே நிமிஷம் மன்மதன் எரிந்து சாம்பலானான். பார்வதி மூர்ச்சித்துப் பூமியில் விழுந்தாள்.

ஆனால் சிவன் கோபம் பயன் படவில்லை. மன்மதன் பாணம் தைத்துவிட்டது ஆழமாக அவர் உள்ளத்தில். விழுந்த பார்வதியை தூக்கி எடுத்து மடியில் வைத்துக் கொண்டு களை நீக்கினார். பார்வதி கண் திறந்து சிவன் முகத்தைப் பார்த்தாள். சிவனுடைய கண் நெருப்பில் மாய்ந்த மன்மதன் மனதில் மறுவுருக் கொண்டான்.

பார்வதி பரமசிவனை அடைந்தாள். மலைச்சாரலில் மெய்ச்சிலர்ப்புடன் மகிழ்ச்சி மூண்டது.

---

## வர்தா திட்டம்

வர்தா திட்டத்தின் முக்கிய அம்சங்கள் நான்கு :

(1) அது உழைப்பினால் கல்வி பெறுவதை மட்டும்தான் வற்புறுத்துகிறது. விற்பனைக்குத் தகுந்த சாமான்களை உண்டாக்குவதைப் பற்றி முக்கியமாகக் கவனிப்பதில்லை.

(2) நூற்றலையும், நெய்வதையும் அடிப்படையான கைத்தொழிலாகச் செய்யவில்லை ; அதை விட உயர்ந்த அல்லது சமதையான கல்வி அளிக்கக்கூடிய எந்தத் தொழிலையும் வரவேற்கத் தயாராயிருக்கிறது.

(3) எந்த வகுப்பாவது மத போதனையை விரும்பினால் அதைத் தடுக்கவில்லை.

(4) உபாத்தியாயர் சம்பளம் பள்ளிக்கூடத்தின் சாமான்கள் விற்ற பணத்திலிருந்து தான் கொடுபட வேண்டுமென்பதில்லை.

## ஒரே வழி

தொழில் உச்சத்தை அடைந்த ரஷ்யாவைப் பார்க்கும்போது அங்கேயுள்ளவர்களின் வாழ்க்கை என் மனதைக் கவரவில்லை. 'தன் ஆத்மாவை இழந்த பின்னர் இந்த உலகத்தையே ஜெயித்துத் தான் என்ன பிரயோஜனம்?' என்று பைபிள் சொல்லுகிறது. தற்காலத்தில், ஒருவன் தனித் தன்மையை இழந்து மிஷினின் சேவகனாக ஆனால் அது மனித கௌரவத்தை இழப்பதாகும். ஒவ்வொருவரும் சமூகத்தில் துடிதுடிப்புள்ள பூர்ண வளர்ச்சி யடைந்த அங்கத்தினனாக ஆக வேண்டுமென்று விரும்புகிறேன். கிராமங்கள் ஒவ்வொன்றிலும் அதன் தேவைக்குத் தகுந்தசாமான்கள் அங்கேயே உற்பத்தியாக வேண்டும். அஹிம்ஸையோடு வாழவேண்டுமென்றால் அதற்கு இதுதான் வழி."—காந்திஜி

# பெரிய குற்றங்கள்

("சிரேஷ்டன்")

I

நாம் எவ்வளவு விஷயத்தைத் தெரிந்து கொண்டிருந்தபோதிலும், படித்த மேதாவிகளாயிருந்தபோதிலும், சிற்சில அற்ப விஷயங்களில் நாம் சுகாதார விதிகளை அனுசரிப்பதில்லை. இது விதிகளை நாம் அறியாததால் ஏற்படுவது அல்ல; கவனக் குறைவால்தான். படித்தவர்கள் விஷயமே இப்படி இருந்தால் கிராமங்களில் வாழும் பாமரர்கள் விஷயம் எப்படி இருக்கும்?

சுகாதார விதிகளை அரசாங்கங்கள் கட்டாயப்படுத்தி அமுலுக்குக் கொண்டு வருவது மிகவும் சிரமமான காரியம். அதைப் படித்தவர்களின் மனமார்ந்த ஒத்துழைப்புடன் வெற்றி பெறச் செய்யலாம். சுகாதார விதிகள் ஜனங்களின் நன்மைக்காக ஏற்பட்டது என்ற எண்ணத்தை மக்களின் மனதில் படித்தவர்கள் தான் வற்புறுத்த வேண்டும்.

உதாரணமாக, நமது பட்டணங்களின் ரோடுகளில் போகும்போதே எச்சிலைத் துப்பும் ஸ்வாரஸ்யமான வழக்கத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அந்தக் கோழையில் எவ்வளவு கிருமிகள் இருக்கின்றன? துப்புபவன் க்ஷயரோகி என்று வைத்துக்கொள்வோம். அதை யாராவது மிதித்துவிட்டால் எத்தனை பேருக்கு ஆபத்து? இவ்வளவுக் கெல்லாம் இடம் வைத்துக்கொள்ளாமல் எச்சிலை ரோடுக்கு ஒரு ஓரமாகப் போய் உமிழ்ந்து விட்டால் அந்தக் கால் வலிக்குமா என்ன?

சென்னைப் பட்டணத்தின் வீதிகளில் மேற்சொன்ன விதமாகச் செய்யப்படும் அக்கிரமம் கணக்கு வழக்கு கிடையாது. பிரதி தினமும் நடுத்தெருக்களில் உமிழப்படும் எச்சில் ஆயிரக்கணக்கான காலன்கள் இருக்கும். இப்படி உமிழப்பட்டும் வியாதி நமக்கு ஏன் வரவில்லை என்றால் ஏதோ நமக்கு ஆயுசு கெட்டியாக இருக்கிறது என்றுதான் அர்த்தம்.

இந்த அற்ப விஷயத்தில் நாம் சற்று சிரத்தை காண்பித்தோமானால் எவ்வளவு நன்றாயிருக்கும்? எச்சில் உமிய வேண்டுமென்றால் இரண்டு அடிகள் எடுத்து வைத்து ஓரமாய்ப் போவது; அதற்கப்புறம் காரியத்தை முடித்துக்கொண்டு திரும்புவது; அவ்வளவு தானே? இதில் என்ன நஷ்டம்? வெற்றிலையைப் போட்டுக்கொண்டு வீதியில் துப்பி ரோடுக்கு நலங்கிடுவானேன்? ஏற்கனவே கார்ப்பொரேஷனில் கருப்புத் தார் போட்டிருக்கிறார்கள். சிகப்புத் தார் வேண்டாம். இந்த விதியை ஒவ்வொரு பட்டணவாசியும் அனுசரித்தால் சுகாதாரத்திற்குப் பெரிய தொண்டு செய்தவர்களாக ஆவார்கள்.

சாலையில் போகும்போது நாலு பேர்கள் ஓரமாய்ப் போய் துப்பி ஓர் வழி காண்பித்துவிட்டால் மற்றவர்கள் அதை அனுசரிப்பார்கள். அப்படி வழி காண்பிக்க வேண்டியவர்கள் படித்தவர்களல்லவா?

அப்படியும் வீதியில் எச்சிலைத் துப்பி அசுத்தம் செய்யும் காலிகளை போலீஸார் நியூஸென்ஸ் சார்ஜ் செய்து தண்டனை விதிக்க வேண்டும். அப்படி விதித்தால் அப்புறம் ஏன் எச்சில் துப்புகிறார்கள்? எச்சிலை துப்ப மாட்டார்கள். அதை விழுங்கிக்கூட விடுவார்கள்! அப்படிப்பட்ட மலை விழுங்கி மகாதேவர்களுக்கு எச்சிலை விழுங்குவதுதானா பிரமாதம்?



# வலை வீச்சு



## டாக்டர் ஷாட்

ஜெர்மன் பொருளாதார டைரக்டரான டாக்டர் ஷாட் கொஞ்சம் கொஞ்சமாகக் கீழே தள்ளப்பட்டுவிட்டார். பத்தொன்பது மாதங்களுக்கு முன்னால் பொருளாதார மந்திரி ஸ்தானத்தை ஹெர் பங்க் வசம் விட்டுவிட்டு வெளியேறினார். நாலு வருஷ திட்டத்தின் பிரதான அதிகாரியான ஜெனரல் கொயரிங்குடன் அபிப்பிராயபேத முண்டானதால் பிளவு ஏற்பட்டது. பொருளாதார மந்திரி வேலையை ஷாட் விட்டது முதற்கொண்டு பிளவு அதிகமாயிற்று. மறுபடியும், இப்போது ரீச் பாங்கித் தலைவர் பதவியிலிருந்து அவர் நீக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு மந்திரி சபையில் ஒருவித இலாகாவும் கொடுக்கப்படவில்லை. ஏதாவது அவருக்கு சில வேலைகள் கொடுக்கப்படலாம். ஆனால் இப்போது நாஜி ஜெர்மனி இருக்கும் நிலையில் ஒரு வேலைகூட அவருக்குக் கொடுக்கப்படுமா என்பது கூட சந்தேகம்.

## ஏன் விலகினார்?

டாக்டர் பங்க் ரீச் பாங்கித் தலைவராக நியமிக்கப்பட்டதன் காரணத்தை ஹிட்லர் கூறியிருக்கிறார். பெரிய ஜெர்மனியைப் புனருத்தாரணம் செய்வதற்கு பொருளாதார, நிதி, கொடுக்கல் வாங்கல் கொள்கைகளில் ஒரு மித்த தலைமை அவசியமானதால்தான் இந்த மாறுதல் என்று அறிக்கை கூறுகிறது. ரீச் பாங்கின் புதிய தலைவரின் கடமையைப் பற்றி ஹிட்லர் கூறியிருக்கிறார். முதலாவதாக, சம்பளத்திலும், விலை வாசியிலும் மாறுதல் ஏற்படாமலும், ரீச் மார்க்கின் மதிப்பு குறையாமலும் பார்த்துக்கொள்ள வேண்டியது. இரண்டாவது, முதலுக்காக ஓர் மார்க்கட் உண்டாக்கி அதை தனிப்பட்டவர்கள் உபயோகித்துக்கொள்ள வசதி அளிப்பது. மூன்றாவது, முன்பாகவே ஏற்பட்ட ஏற்பாட்டின்படி ரீச் பாங்கை ஜெர்மன் மதிய பாங்கி ஸ்தாபனமாகச் செய்யவேண்டியது. உலக மார்க்கட்டில் ஜெர்மனி சுயேச்சையுடன் போட்டி போடும்படி ஜெர்மனியின் தொழிலையும் வியாபாரத்தையும் பலப்படுத்துவதற்காக இப்படி செய்யப்படுவதாகக் கூறுகிறார்.

## ஜெர்மனியின் பொருளாதாரம்

ஜெர்மனியின் எதிர்காலப் பொருளாதாரம் எந்த வழியில் செல்லுமென்பதை இது காட்டுகிறது. கொஞ்ச காலத்திற்கு முன்னால், ஜெர்மனியில் உள்நாட்டுக் கலகம் உண்டாகப் போகிற தென்றும் அது ராஜாங்கத்திற்கு விரோதமான புரட்சியாகவோ அல்லது நாஜி பொருளாதார முறைமீது ஏற்படும் வெறுப்பால் எழும் கலகமாகவோ இருக்கலாம் என்று கூறப்பட்டது. ஆனால் பக்ஷபாத மற்றவர்கள் நாஜிக் கப்பல் பொருளாதார மலையில் நிச்சயம் மோதப் போகிறதென்று கருதினபோதிலும் இந்தக் கூற்று விஷமப் பிரசாரர்களின் பொய் என்று சொன்னார்கள்.

ஜெர்மன் பொருளாதாரத்தின் பிரச்னை ஒரேகுறைவுப் பிரச்னை—மூலப்பொருள்களில் குறைவு, தொழில் சக்தியில் குறைவு, முதல் விஷயத்தில் குறைவு, ஒவ்வொரு விதமான ரிஸர்விலும் குறைவு. தொழில் விஷயத்தில் 100-70 பங்குகள்தான் ஜெர்மனியில் தனக்குத் தானே போதுமானதாக இருக்கிறது.

ஆகார உற்பத்தியில், குடும்ப ஸ்திரீகள் தங்கள் ஆகாரப் பங்குக்காகக் காத்துக் கொண்டிருப்பதிலிருந்து மற்ற விஷயங்களை ஊகித்துக் கொள்ளலாம். ஆனால் அதற்குப் பதிலாக செயற்கைப் பொருள்கள் வேகமாகக் கண்டுபிடிக்கப்பட்டு உற்பத்தியும் செய்யப்பட்டபோதிலும் போதுமான அளவு அவை செய்யப்படவில்லை. சர்க்காரின் கட்டளையை ஆதாரமாகக் கொண்டு தொழில்கள் நடமாடி வருகின்றன. அதில் ஏற்படும் அபிவிருத்திகளின் காரணம் ஆயுத முஸ்தீப்பு. சர்க்கார் கடன் வாங்கி வாங்கி முதல் மார்க்கட் வரட்சையாய்ப் போய்விட்டது.

## உள் அந்தரங்கம்

ஆயுத முஸ்தீப்புத் திட்டத்தால் ஒரு செயற்கையான க்ஷேமம் இருக்கும்படி செய்திருக்கிறார்கள். நிதிகளைப்போலவே எல்லா லாப

மும் ஒரே விஷயத்திற்குப் போகும்படி வரிகளும் விதிக்கப்பட்டிருக்கின்றன. கட்டுக்கோப்பான தொழில் காம்புகள் கிராம ஜனங்களை வசீகரித்து அழைக்கின்றன. ஆனால் அவர்கள் ஜெர்மன் படையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இதனால் விவசாயத்தைக் கவனிப்பாரில்லை. விவசாய மந்திரி எவ்வளவோ முயன்றார். நிலைமையை சீர்படுத்தக் கடுமையான நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தார். ஆனால் தேசத்தின் பொருளாதாரம் தவறான வழியில் செலுத்தப்படும்போது அவர் என்ன செய்தாலும் பிரயோஜனமுண்டா?

இந்த நிலைமையை யாராகிலும் எதிர்த்தால் ஆயுத பலத்தால் அடக்கப்படுகிறது. ஜெர்மனியின் ஏற்றுமதிக் கொள்கையை அறிந்து உலகம் விழித்துக்கொண்டுவிட்டது. இதனால் ஜெர்மனியின் ஏற்றுமதி வியாபாரம் பாதிக்கப்படலாம். அதனால் யாருக்கு நஷ்டம்? ஜெர்மன் ஜனங்கள் உலகத்தின் நிலைக்கு அதிகமாகவே பணம் கொடுத்து சாமான்களை வாங்குகிறார்கள். மார்க்கின் மதிப்பு குறைந்து செலாவணியில் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. 1923-ம் வருஷம் போல் இப்போது அதிக நோட் போட முடியாது. ஏனென்றால் மார்க் தங்கத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறது.

## கஷ்டம் வந்துவிட்டது!

ஜெர்மனியின் ஆயுத முஸ்தீப்புத் திட்டம் அதன் பொருளாதாரத்தை எவ்வளவு தூரம் பாதிக்குமென்று வெளி தேசத்தாருக்குத் தெரியாது. ஆனால் சமீபத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் அதிக நோட் போட்டால்தான் ஜெர்மனிககு விமோசனம் உண்டாகும் என்பதைக் காண்பிக்கின்றன.

நாணயச் செலாவணியில் நெருக்கடி ஏற்படவில்லை என்று ஜெர்மன் பொருளாதார நிபுணர்கள் கூறலாம். ஆனால் தனிப்பட்டவர்கள் எச்சரிக்கை கொடுத்து விட்டார்கள். அப்படிப்பட்டவர்களில் 'தொழிலின் நண்பர்' என்று பெயர் வாங்கிய டாக்டர் ஷாட்டும் ஒருவர். அவர் முதலை உபயோகித்துக் கொண்டு தொழில்களைக் கொல்லுவதையும், அதிக வரி போடுவதையும், உபயோகமற்ற வழிகளில் முதல் போவதையும் எதிர்த்தார். இது தலைவர்களுக்குக் கசப்பாயிருந்தது. ஆனால் ஷாட் தொழில் வளர்ச்சியில் கண்ணாயிருந்து அயல் நாடுகளில் சாமான்களுக்கு "மார்க்கட்" கண்டுபிடித்து, நாணயமாற்று முதலிய தந்திரங்கள் மூலமாக நாஸி திட்டங்களுக்கு உதவி செய்ய முற்பட்டார். ஆனால் மற்ற நாடுகள் விழித்துக் கொண்டதும் அந்தத் தந்திரத்தை விட்டுவிட வேண்டியதாயிற்று. வெளியேறும் யூதர்களுக்கு ஷாட் பண உதவி செய்ய முன் வந்தது ஓர் உதாரணம். யூதர்களுக்கு முதலில் பணத்தைக் கொடுத்து வெளியேற்றி விட்டு அந்தப் பணத்தை அயல்நாட்டுக்கு அனுப்பும் அதிகப்படி ஜெர்மன் சரக்கு கொடுக்கும் நிதியிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டு சரிக்கட்டி விடலாமென்று நினைத்தார், போதுமான அவகாச மளித்தால் ஷாட் அகில அரசாங்க யூதர் கமிட்டியுடன் ஏற்பாடு செய்து வெற்றி பெற்றிருப்பார். ஆனால் தலைவர்கள் காத்துக்கொண்டிருக்க விரும்பவில்லை. பொருளாதார விஷயமும் ராஜீய விஷயம் மாதிரி வேகமாக நடக்க வேண்டுமென்றார்கள். ஆகையால் ஷாட் வெளியேறினார். —இந்தியன் அபேர்ஸ்

## மைசூர் அரசாங்கமும் ஹரிஜனங்களும்

ஹரிஜனங்களுக்காக ஒவ்வொரு டிபார்ட்மெண்டும் என்ன செய்திருக்கிறதென்பதைக் கவனித்து பொதுவாக அவர்கள் பொருளாதார நிலைமையை அபிவிருத்தி செய்யும்படியான திட்டங்களைப் பிணைத்துக் கொடுக்க ரெவின்யூ கமிஷனர் உத்தரவிடப்பட்டிருக்கிறார். அவர் மற்ற இலாகாக்களுடன் கலந்து ஹரிஜனங்களின் கடன் நிவாரணம், சமூக விஷயங்கள், விவசாய காலனி, கூட்டுறவு சங்கம், முதலிய எல்லா விஷயங்களையும் கவனிப்பார்.

ஹரிஜனங்களின் குடியிருப்பு சம்பந்தமாக பங்களூர், மைசூர் முனிஸிபாலிடிகள் கவனித்து வருகின்றன. தோட்டிகள் குடியிருப்புக்காக பங்களூர் முனிஸிபாலிடி ஐந்து வருஷத் திட்டம் போட்டிருக்கிறார்கஸ். மகாராஜா அளித்த நன்கொடை ரூ. 9,500-ஐக் கொண்டு மைசூர் முனிஸிபாலிடி 12 வீடுகள் கட்டி முனிஸிபல் தோட்டிகளுக்கு அளித்திருக்கிறது.

மைசூர் சமஸ்தானத்தில் 9,17,000 ஹரிஜனங்கள் இருக்கிறார்கள். அவர்கள் குழந்தைகளுக்காக 600 விசேஷப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. 20,000 சிறுவர்கள் படித்து வருகிறார்கள். இலவசக் கல்விதான். ஹரிஜன மாணவர்களுக்காக ஆறு இலவச சர்க்கார் ஹாஸ்டல்கள் இருக்கின்றன. பரீக்ஷை செலவு, வேஷ்டி, புஸ்தகம் முதலிய விஷயங்களில் கால் லக்ஷம் ரூபாய் சர்க்கார் செலவு செய்கிறார்கள். ஹரிஜனங்களில் கல்விக்காக சர்க்கார் ஒரு வருஷத்தில் செலவிடும் மொத்தத் தொகை 2½ லக்ஷ ரூபாய்.